விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 08 வியாழக்கிழமை (23.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 186

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சனல் 4 இன் ஆவணப் படத்தால் படை அதிகாரிகளுக்கு நெருக்கடி!

## ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

**சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப் படம் வெளிநாடுகளிலுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

அதில் மேலும் கூறியுள்ளதாவது.

இந்த ஆவணப் படம் போலியானது. இந்தியாவில் ஒளிப்பதிவுசெய்யப்பட்டது என்று அரசாங்கம் கூறிவருகிறது.

இந்த ஆவணப்படத்தின் பின்புலக் காட்சிகள் போர் வலயத்தில் எடுக்கப்பட்டவை அல்ல என்றும், அதிலுள்ளவர்கள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் அல்ல என்றும், ஐரோப்பிய நாடுகளுக்கு விளக்கமளிக்குமாறு இலங்கைத் தூதரகங்களில் பாதுகாப்பு ஆலோசகர்களாகப் பணி (19ஆம் பக்கம் பார்க்க)

## ‘தமிழ்ச்செல்வனுக்குப் பதிலாக பிரபாகரன் என்று கூறிவிட்டேன்’

### மன்னிப்புக் கேட்டார் அஸ்வர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மனைவி மற்றும் பிள்ளைகள் உயிரோடு இருப்பதாக தான் தவறுதலாகத் தெரிவித்துவிட்டதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் கூறியுள்ளார்.


அல் கைதா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லாடனின் மனைவி, பிள்ளைகளுடன் கொல்லப்பட்டது போன்று பிரபாகரனின் மனைவியும் பிள்ளைகளும் படைத்தரப்பால் கொல்லப்படவில்லை எனவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவர்களை மனிதாபிமானத்துடன் பராமரித்து வருவதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது தெரிவித்திருந்தார்.

அத்துடன் பிரபாகரனின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்துள்ளதாகவும் அவர் தனதுரையில் குறிப்பிட்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வரின் இக் கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், தமிழ்ச்செல்வனின் மனைவி பிள்ளைகள் குறித்தே தான் கூற வந்ததாகவும், தவறுதலாக பிரபாகரன் என்று கூறிவிட்டதாகவும் நேற்று பிற்பகல் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட அவர், அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வன்னியில் இடம்பெற்ற போரின் போது இறுதிக்கட்டத்தில் மரணமாகிவிட்டதாக இலங்கை அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இலங்கை குறித்த கேள்விக்கு பதிலளிக்க மறுத்த பான் கீ மூன்



(நியூயோர்க்)

பான் கீ மூன் இரண்டாவது தடவையாகவும் ஐ.நா. செயலாளர் நாயகமாகத் தெரிவானதைத் தொடர்ந்து அவரிடம் கேட்கப்பட்ட முதலாவது கேள்வி இலங்கை தொடர்பானது என இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

ஐக்கிய (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு- கூட்டமைப்பு இன்று சந்திப்பு

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான் முக்கியமானதொரு கலந்துரையாடல் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரு தரப்பிற்கும் இடையிலான இக் கலந்துரையாடல் கொழும்பு கோட்டையிலுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுறுத்தலுக்கு அஞ்சப்போவதில்லை தீர்வு கிடைக்கும்வரை பணி தொடரும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீராப்பு

(கொழும்பு)

எத்தகைய அச்சுறுத்தலுக்கும் நாம் அஞ்சப்போவதில்லை. தீர்வு கிடைக்கும்வரை எமது பணி தொடரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும்போது அவர் இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றும்போது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்த மண்ணிலிருந்து என்ன விலை கொடுத்தாவது அழித்தொழிக்க வேண்டும் என இந்த அரசாங்கம் கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுவதை யாவரும் அறிவோம். தமிழ் மக்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊடகங்களில் வடிகட்டிய செய்திகள்

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச ஊடகங்கள் அனைத்திலும் வடிகட்டிய பொய்யான செய்திகளையே வெளியிட்டுக்கொண்டிருப்பதாக ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். அரச ஊடகங்கள் ஊடக தர்மத்திற்கு அப்பால் சென்று தங்கள் எஜமானர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிலான செய்திகளை வெளியிடுவதற்கே முன்னுரிமை கொடுப்பதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றைய லக்பிம சிங்கள நாளேட்டிற்கு அளித்துள்ள விசேட நேர்காணலிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இன்றைய நிலையில் தான் மேற்கொள்ளும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுப்பதற்கு எதிர்க் கட்சிகளை முடக்கிவைக்க முனைகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் போர்க் குற்றங்கள் பிரி. நாடாளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த குழுநிலை விவாதம் ஒன்று பிரித்தானிய நாடாளு மன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதிநிதிகள் சபையின் நாடாளுமன்ற அமைப்புக்களுக்கான அறையில் இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்ற மனித உரிமைகள் குழு மற்றும் லண்டனைத் தளமாகக் கொண்ட அனைத்துலக மன்னிப்புச் சபை ஆகியன இந்த விவாதத்திற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளதுடன், சனல் 4 ஒளிபரப்பியுள்ள இலங்கையின் கொலைக் களங்கள் என்ற ஆவணப்படத்தையும் திரையிட்டுக் காண்பிக்கவுள்ளன.

இந்த விவாதத்தில் பிரித்தானியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் உள்ளிட்ட பலரும் (19ஆம் பக்கம் பார்க்க)

## தேசத்திற்கு மகுடம் 2012 அநுராதபுரத்தில்

(கொழும்பு)

தேசத்திற்கு மகுடம் 2012 எனும் அபிவிருத்திக் கண்காட்சியை அநுராதபுரத்தில் ஓயமடுவ நகரில் நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இக் கண்காட்சி ஏற்பாட்டுக் குழுவினருடனான விசேட கூட்டமொன்று ஜனாதிபதி தலைமையில் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற போது இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தை ஒட்டி (20ஆம் பக்கம் பார்க்க)

## உறுதியற்ற நிலைப்பாட்டில் ஐ.நா. செயலாளர் பான் கீ மூன்

### மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையைப் பொறுத்தவரை ஐ.நா. தலைமைச் செயலாளர் பான் கீ மூன் ஒரு உறுதியற்ற நிலைப்பாட்டையே கடைப்பிடித்தார் என்று மனிதவுரிமைகள் அமைப்பான ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பின் ஆசிய இயக்குனரான பிராட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் தலைமைச் செயலாளராக பான் கீ மூன் அவர்கள் இரண்டாவது பதவிக்காலத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் அவர் இலங்கை உட்பட பல நாடுகளில் மனித உரிமை மீறல்களைத் தடுக்கத் தவறிவிட்டார் என்றும் பல மனிதவுரிமை அமைப்புக்கள் கருத்து வெளியிட்டிருந்தன.

இது குறித்துக் கருத்துக் கூறுகையிலேயே (19ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# நிபுணர் குழுவின் 31 கேள்விகளுக்கு அரசாங்கம் இரகசியமாகப் பதில்

# அம்பலப்படுத்தியது ஐ.தே.க

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு அறிக்கையின் 31 கேள்விகளுக்கு அரசாங்கம் இரகசியமாக பதிலளித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒதுக்கீடு சட்டமீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையை நிராகரித்துள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதிலும் இவ் அறிக்கையில் கேட்கப்பட்டுள்ள 31 கேள்விகளுக்கும் அரசாங்கம் மிகவும் ரகசியமான முறையில் பதிலளித்துள்ளதாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது பொதுமக்களில் ஒருவர் கூட் கொல்லப்படவில்லை என அரசாங்கம் கூறுகின்றது. இதனை எவரும் நம்பமாட்டார்கள்.

இலங்கை தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பாகவும் சனல் 4 வெளியிட்ட காணொளிக்காட்சிகள் தொடர்பாகவும் சர்வதேச நாடுகளுக்கு விளக்கமளிக்க அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை.

இவை தொடர்பில் சர்வதேச நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதனை செய்யவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பு சனல் 4 தொலைக்காட்சி காணொளி ஒன்றை ஒளிபரப்பியது. இதற்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அப்போது கூறியது. ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் அபகீர்த் தியை தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இதுதொடர்பாக ஊடகங்களுடனோ நாட்டு மக்களுடனோ அல்லது நாடாளுமன்றத்திலோ பேசுவதில் எந்த பயனும் இல்லை. சர்வதேச நாடுகளுடன் தான் இது குறித்து பேச வேண்டும்.

நிபுணர்கள் குழுவின் அறிக்கையை பொய் என நிருவிப்பது அரசாங்கத்தின் கைகளில்தான் இருக்கிறது.

ஆனால் இது தொடர்பில் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனவே இது தொடர்பாக உடனடியாக சர்வதேச நாடுகளுடன் பேசவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம் ஒன்றை கொழும்பில் திறந்து இலங்கை தொடர்பான குற்றச்சாட்டுக்களை பொய்யாக்குவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டுமென லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (எ)



## தாயையும், மகனையும் காணவில்லை கிளிநொச்சி பொலிஸில் முறையீடு

கிளிநொச்சி அக்கிராயன் பகுதியில் தாயும், மகனும் காணாமல் போயுள்ளனர் இச்சம்பவம கடந்த 8ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

அக்கிராயன் பாடசாலை வீதியைச் சேர்ந்த மதன்-அனுசியா (வயது 18) அவரது மகன் பவிராஜ் (வயது 02) ஆகியோர் கிளிநொச்சி நகரிலுள்ள உணவகம் ஒன்றுக்கு செல்லுவதாகக் கூறிவிட்டுச் சென்றவர்கள் வீடு திரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டது.

குறித்த பிரஸ்தாப பெண்ணும் அவரது மகனும் தமது அம்மம்மாவான கணபதி-மணி (வயது 65) என்பவரின் பராமரிப்பிலேயே வாழ்ந்து வந்தனர்.

சொந்த தேவையின் நிமித்தம் கொழும்பு சென்ற இவர்களில் குறித்த பெண்ணும் அவரது மகனும் மட்டும் கொழும்பிலிருந்து வீடு திரும்பினர்.

வீட்டிற்கு வந்த குறித்த பெண் தான் கிளிநொச்சி செல்வதாக அயலில் உள்ளவர்களுக்கு கூறிவிட்டு சென்றவர் வீடு திரும்பவில்லை. இவர்கள் காணாமல் போய் 13 நாட்கள் ஆனபின்பே பொலிஸார் நேற்று இம் முறைப்பாட்டை ஏற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த பெண்ணின் கணவர் யுத்தத்தில் உயிரிழந்து விட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ)

## கிளிநொச்சியில் வாகன விபத்து; ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தஇருவர்முன்னால் சென்ற கன்ரர் வாகனத்தை விலத்தி செல்ல முற்பட்ட போது ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றையவர் காயமடைந்தார். இச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவுவட்டக்கச்சியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கட்சன் வீதி வட்டக்கச்சியைச் சேர்ந்த இ.பிரபாகரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

கதிரவேலு, அருந்தவதாசன் என்பவர் காயமடைந்தார். இச் சம்பவம் தொடர்பாக எதிரேவந்த மோட்டார் சைக்கிள் சாரதி, கண்டர் வாகன சாரதி, காயமடைந்த நபர் ஆகிய மூவரையும் விசாரணை செய்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் மூவரையும் இரண்டு லட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார். இறந்தவரின் சடலம் மரண விசாரணையின்பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஸ்ரீ-3)

# இங்கிலாந்தில் சாதனை புரிந்த சாவகச்சேரியை சேர்ந்த மாணவன்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியைச் சேர்ந்த டாக்டர் சிதம்பரநாதன் சபேசன் இங்கிலாந்தில் a groung breaking radio teal time tagging system என்ற கண்டுபிடிப்பை நிகழ்த்தி சாதனை படைத்துள்ளார். இச்சாதனைக்காக அவருக்கு கண்டுபிடிப்பாளர் மற்றும் கண்டுபிடிப்பை வர்த்தக ரீதியாக அறிமுகப்படுத்துபவர் ஆகிய உயரிய விருதுகள் வழக்கப்பட்டுள்ளன.

இவர் தனது இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்று 2000 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் 9 ஏ,பி சித்தியையும் உயர்தரக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் கற்று 3 ஏ சித்தியையும் பெற்றார்.

தொடர்ந்து மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டு அங்கு சில மாதங்கள் கல்வி பயின்றார்.

இந்நிலையில் இங்கிலாந்தில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றான Sheffield பல்கலைக் கழகத்தில் புலமைப் பரிசில் பெற்று தனது இளநிலை பொறியியல் கல்வியை (B.Eng.Electronic Engg) 2007ஆம் ஆண்டு பூர்த்தி செய்து இங்கிலாந்து ரீதியான தெரிவான 18 முதல் மாணவர்களின் ஒருவராக திகழ்ந்தார்.

இந்த சாதனைக்காக இவருக்கு Sie William Siemen Medal பதக்கம் வழுங்கப்பட்டது.

தொடர்ந்து தனது முதுமாணிக் கல்வியை உலகளாவிய ரீதியில் திறமை வாய்ந்த இங்கிலாந்து கேம்பிரிச் பல்கலைக்கழகத்தில் புலமைப் பரிசில் பெற்று தொடர்ந்தார். இங்கு முதலில் Master Of Physicology in Electronic Engg மற்றும் Doctor of Physicology in Electronics Engg என்ற உயரியபட்டங்களையும் பெற்றுக்கொண்டார்.

பல விருதுகளையும் பரிசில்களையும் பெற்ற இவரது ஆராய்ச்சி கண்டு பிடிப்புகள் இங்கிலாந்து பத்திரிகைகளிலும் பல்வேறு ஆங்கில இணையத்தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டு Patients Inventer என்றபட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவர் தற்போது கேம்பிரிச் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் கிரிக்கெட் கழக தலைவராகவும் கேம்பிரிச் பல்கலைக்கழகத்தின் பொறியியல் தொழில்நுட்ப இளைய வல்லுநர் அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவரது கண்டுபிடிப்பான radio real time tagging system ஆனது வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் எயார் லையின்ஸ் நிறுவனங்களுக்கும் கோடிக்கணக்கான வருமானங்களை ஈட்டக் கூடிய வாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

இவரது கண்டுபிடிப்பான inteligent wireless passive sensor technology system விமான நிலையத்தின் பயணிகளையும் பயணிகளின் உடைமைகளையும் தெளிவாக இனங்காட்டக் கூடியது. இவரது கண்டு பிடிப்பு விமான நிலையங்களில்பாதுகாப்புசேவைக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. (எ)


யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும்

காலம் - 24.06.2011 வெள்ளிக்கிழமை
நேரம் - காலை 8:30 மணி
இடம் - பாவலர்துரையப்பாபிள்ளை கேட்போர் கூடம்

**தலைவர்**
திருமதி சிவமலர் அனந்தசயனன்
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

**முதன்மை விருந்தினர்**
உயர்திரு.இ.இளங்கோவன்
செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்
திருமதி கிருபாகரி இளங்கோவன்

**சிறப்பு விருந்தினர்**
திரு.ஆ.இராஜேந்திரன்
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்
திரு.சொ.அமிர்தலிங்கம்
தலைவர், வடமாகாண பொது சேவை ஆணைக்குழு
திரு.இ.இரவீந்திரன்
செயலாளர், கனடா ப.மா.ச.

**ஆசியுரை**
திரு. ஆறு.திருமுருகன்
தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
அதிபர், யா/ஸ்கந்தவரதோயக் கல்லூரி

**நினைவுப்பேருரை**
திருமதி பி.செல்வின் இரேனியஸ்
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்

**நன்றியுரை**
திரு.செ.உமாகாந்தன்
(இணைச்செயலாளர், பழைய மாணவர் சங்க தாய் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-3554) கல்லூரிச் சமூகம்


## இறை பிரார்த்தனை

## அஞ்சலி



**அமரர் ஸ்ரீமான் தம்பையா சதாசிவம் (சோமு)**

**(குடாரப்பூ பெரியதம்பிரான் தேவஸ்தான ஸ்தாபகர், தோத்திரபுராண படன ஓதுவர்)**

22.06.2011 அன்று எமது அன்பு நண்பர் அதிபர் உயர்திரு. க.க.யோகநாதன் (யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர்)அவர்களின் அன்பு மாமனார் அமரர் ஸ்ரீமான் தம்பையா சதாசிவம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு மிகவும் துணுக்குற்றோம்.அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு அன்னை ஆறுதல் அளிக்க வேண்டி அன்னார் ஆத்ம சாந்திபெற எம் அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனை அனுதினமும் இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பன்,
சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்,
பிரதி அதிபர்,
(யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை),
நெல்லண்டைப்பத்திரகாளி அம்மன்,
தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம்,
ஸ்ரீ வீரமாகாளி வடபத்திரகாளி அம்மன்,
பிரதம குரு ஆதீனகர்த்தா.

## இன்று ஒரு தகவல்

# சார்லி சாப்ளின்

ஒரு அம்மா மேடையில் பாடிக்கொண்டிருந்தார். அதை ஐந்து வயது பையன் கீழே இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அந்த அம்மாவின் பிள்ளை இவன்.

தன் தாயார் பாடுவதைத் தான் எல்லோரோடும் சேர்ந்து கூட்டத்தில் உட்கார்ந்து இவன் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

ஒரு கட்டத்தில் திடீரென்று அந்த அம்மாவுக்குத் தொண்டை கட்டிக்கொண்டது. அவரது குரல் ஒத்துழைக்கவில்லை.

அதனால் அவரால் தொடர்ந்து பாடமுடியவில்லை.

தன் அம்மாவால் பாட முடியவில்லை என்பதை இந்த சின்னப் பையன் புரிந்து கொண்டான்.

உடனே அவன் ஓடிச்சென்று மேடையில் ஏறினான். பாதியில் நின்று போன பாடலை தொடர்ந்து பாட ஆரம்பித்தான்.

பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்கள் எல்லோரும் அப்படியே அசந்து போய் விட்டார்கள். அவ்வளவு பிரமாதமாக சிறுவன் பாடுகின்றான்! ரசிகர்கள் மத்தியில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்!

ரசிகர்கள் மேடையை நோக்கி காசுகளை வீச ஆரம்பித்தார்கள்.

சிறுவன் மேடையில் காசுகள் விழுவதை பார்த்தான். அவன் திடீரென்று தான் பாடுவதை நிறுத்தினான். பொதுமக்களை பார்த்து சொன்னான்.

"கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் ... இந்த காசுகளை பொறுக்கி கொள்கின்றேன். அதன்பின்னர் தொடர்ந்து பாடுகின்றேன்!" என்று சொல்லிவிட்டு குனிந்தான்.

அவனது அந்த செயலைப் பார்த்து கூட்டத்தில் ஒரே சிரிப்பு... எல்லோரும் கைதட்டி சிரிக்க ஆரம்பித்தார்கள்.

இதுதான் அவன் முதல் தடவையாக மக்களை சிரிக்க வைத்த நிகழ்ச்சியாகும்.

அதன் பின்னர் 88 வயதில் அவன் இறக்கும் வரைக்கும் மக்களை சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான்.

அந்த மாபெரும் கலைஞன்தான் சார்லி சாப்ளின்!

நம் கலைவாணர் போன்று மக்களை சிரிக்க மட்டுமல்ல சிந்திக்கவும் வைத்தவர் சார்லி சாப்ளின்!

1931 ஆம் வருடம். பேசாத திரைப்படங்கள் வந்து கொண்டிருந்த காலம். அவற்றில் வசனம் கிடையாது .அந்த படங்களில் வெறும் காட்சிகள் மூலமாகவே கருத்துக்கள் சொல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது.

அப்போது 'நகர விளக்குகள்'(The City Lights) என்ற ஒருபடம் வெளிவந்தது. அதில் ஒரு காட்சி இது.

ஒரு நகரத்தின் சிலை திறப்பு விழா நடைபெறவிருக்கிறது.

சிலையை திறந்து வைப்பதற்கு அந்த நகரத்திள் மேஜர் வருகிறார்.

அந்த சிலையை ஏற்கனவே ஒரு பெரிய போர்வையால் மூடி வைத்திருக்கிறார்கள். மேஜர் வருகிறார்... சிலையை மூடியிருந்த போர்வையை எடுக்கிறார்...சிலையின் மடியில் படுத்திருந்த ஒரு ஏழை குளிரில் நடுங்கியபடியே இறங்கி ஓடுகிறான். அது சார்லி சாப்ளின்! காட்சி அவ்வளவு தான். வசனம் எதுவுமில்லை. இருந்தாலும் அந்த காட்சி தெரிவிக்கும் கருத்து என்ன தெரியுமா?

இந்த நகருக்குள் இருக்கும் ஏழைக்கு குளிருக்கு போர்வை இல்லை ! ஆனால் உயிருடன் இல்லாத ஒரு பெரிய மனிதருக்கு சிலை ... அதற்கு போர்வையா?

– இதுதான் அவர் சொல்ல வந்த கருத்து.

அந்த காலத்தில் பேசாமல் முக பாவத்தின் மூலமாகவே சமுதாயப் புரட்சிக் கருத்துக்களை மக்கள் மனதில் பதிய வைத்தவர் சார்லி சாப்ளின்.

இயற்கையாகவே அவர் கொஞ்சம் குள்ளமான உருவம் கொண்டவர். அதோடு தொளதொள என்று தையல் போட்ட ஒரு பேண்ட் அணிந்திருப்பார். தலையில் உயரமான ஒரு தொப்பி ... கையில் ஒரு வோக்கிங் ஸ்டிக்..கோணங்கி தனமான ஒரு நடை... இதுதான் சார்லி சாப்ளின்!

பிற்காலத்தில் அவரது நடை , உடை பாவனைகளை பின்பற்றி நிறையப் பேர் நடிக்க ஆரம்பித்தார்கள்.

ஏன்? அவர் காலத்திலேயே நிறையப் பேர் அவர் மாதிரியே வேஷம் போட்டு நடித்திருக்கிறார்கள்!

ஒரு சமயம் சார்லி சாப்ளின் ஏதோ ஒரு இடத்திற்கு சென்றிருக்கிறார்.

அங்கே ஒரு பெரிய மண்டபம். அதில் ஒரு மாறு வேடப் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. 'சார்லி சாப்ளின் மாதிரி வேடம் போட்டு நடித்து காட்ட வேண்டும்' என்பது தான் அங்கு நடந்து கொண்டிருந்த போட்டி!

இந்த போட்டியில் சார்லி சாப்ளினும் கலந்து கொண்டாராம். அதில் அவருக்கு மூன்றாம் பரிசு தான் கிடைத்ததாம்.

இதிலிருந்து எப்போதுமே அசலை விட நகலுக்கு தான் வரவேற்பு அதிகம் என்பது புரிகிறது இல்லையா?.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து சென்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று இரண்டாவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக புதுக்கோட்டை மீனவர்களும் வேலை நிறுத்தத்தை தொடங்கியுள்ளனர்.

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வர மீனவர்கள் 23 பேரையும் அவர்களின் ஐந்து படகுகளையும் இலங்கை கடற்படையினர் கடந்த 20 ஆம் திகதி அன்று சிறைப்பிடித்து சென்றனர். 23 மீனவர்களையும் இலங்கை தலைமன்னாரில் சிறை வைத்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் இந்த அட்டூழியத்தை கண்டித்து இராமேஸ்வர மீனவர்கள் கால வரையறையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கினர். இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள் கரையிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டுள்ள 23 மீனவர்களையும் மீட்டு தரும்வரை தங்களது போராட்டம் ஓயாது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று இரண்டாவது நாளாக இந்த வேலை நிறுத்தம் நீடிக்கிறது. (ஸ்ரீ-4)

## கும்பாபிஷேக நிகழ்வில் பங்குபற்றிய அடியார்களின் தங்கநகைகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் கும்பாபிஷேக நிகழ்வு நேற்று காலை இடம்பெற்ற வேளை அங்கு கூடியிருந்த பக்தர்கள் சிலரின் தங்கச் சங்கிலிகள் திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, மேற்படி கோவிலில் கும்பாபிஷேக நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் 6 பேர் அணிந்த தங்கச்சங்கிலிகளை திருடர்கள் அபகரித்து சென்றுள்ளனர்.

ஏற்கனவே இப்பகுதியில்
சந்தேகத்திற்கு இடமான
முறையில் பெண்கள் நட
மாடித் திரிந்ததாக அங்
குள்ள. மக்கள் தெரிவிக்
கின்றனர். மேற்படி ஆலய
வளாகத்தினுள் நுழையும்
பக்தர்கள் தமது தங்க ஆபர
ணங்களை பாதுகாத்துக்
கொள்ளுமாறு ஒலி பெருக்
கியினுடாக தொண்டர் படையி
னர் முன்னெச்சரிக்கை அறி
வித்தல் விடுத்துள்ளமை
குறிப்பிடத்தக்கது (ஸ்ரீ-2)

## மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வு

(காரைநகர்)

காரைநகர் மத்தி மேம்பாட்டுக் கழகம் நடத்தும் மாணவர் ஊக்குவிப்பு நிகழ்வு நாளை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ற்ரன் கல்லூரி மண்டபத்தில் காரைநகர் மத்திய மேம்பாட்டுக் கழகத் தலைவர் ந.கிருஷ்ணபவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய அதிபர் சு.கணேசமூர்த்தி, காரைநகர் கோட்டக்கல்வி அலுவலக உலக உணவுத் திட்ட இணைப்பாளர் இ.பிரபாகரன், தொழிலதிபர், உரிமையாளர் இ.எஸ்.பி. நாகரத்தினம், காரைநகர் மத்திய கிராம அலுவலர் சி.சுமந்திரன், கனடாவைச் சேர்ந்த திரு.திருமதி.தர்மலிங்கம் தங்கம்மா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் 2010ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசிலில் சித்தி பெற்ற காரைநகரைச் சேர்ந்த 5 மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 48 மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஸ்ரீ-246)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 25 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 90 | 70 | 60 |
| தக்காளி | 25 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 60 | 60 | 60 |
| பூசணி | 25 | 50 | 30 |
| புடோல் | 35 | 40 | 25 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 150 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 70 |
| பயற்றங்காய் | 20 | 80 | 60 |
| லீக்ஸ் | 60 | 50 | 60 |
| பீற்றூட் | 40 | 80 | 80 |
| கறிமிளகாய் | 50 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 300 |
| போஞ்சி | -- | 100 | -- |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | 20 |
| கீரை – 1 பிடி | 05 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-100 | 100 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 50 | 50 |

## இராசி பலன்

*23.06.2011*
*(ஆனி 08, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு*
*அட்டமி முழுவதும்*
*பூரட்டாதி முற்பகல் 10.09 மணிவரை*
*இராகுகாலம் 1.24-2.54 மணி வரை*
*சுபநேரம் 7.24-8.54மணிவரை*

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடிய நேரம் பணிபுரிய நேரிடலாம், தொழிலில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுண்டு.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், பொருட்சேர்க்கையுண்டு, எடுத்த காரியம் எளிதில் நிறைவுறும்.

**மிதுனம்** அதிக பிரயாசை எடுப்பீர்கள், தொல்லை கொடுத்தவர்கள் மனம் மாறி உதவ முன்வருவர், அரசு வழி அனுகூலமுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**கடகம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், பொருட்சேர்க்கையுண்டு, திடீர் பயணங்களால் ஆதாயம் ஏற்படலாம், சொத்து சம்மந்தப்பட்ட பிணக்குகள் சுமுகமாக முடியும்.

**சிங்கம்** வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**கன்னி** வாழ்க்கை துணை வழியே வசந்தம் வந்து சேரும் நாள், புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள், திருமண முயற்சிகள் கைகூடும், கௌரவமான நாள்.

**துலாம்** கடிதம் கனிந்த தகவலை தரும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், நன்மைகள் நடைபெறும் நாள், வெளியூர் தொடர்புகள் விரிவடையும்.

**விருச்சிகம்** சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** மனதில் இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும், சகோதர வழியில் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும், சுபசெய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பாசம் அதிகரிக்கும்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், பிரயாண நன்மையுண்டு, பெண் வழி பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், புத்திசாதுரியமாக செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டு பெறுவீர்கள், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே கோபத்தை குறைப்பது நல்லது.

வளவன்

## கூட்டுறவுச் சங்கத்தில் இரசாயனப்பசளை இன்மையால் விவசாயிகள் பாதிப்பு

(மாதகல்)

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இரசாயனப் பசளைகள் இன்மையால் அப்பிரதேச விவசாயிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் விவசாயிகள் மானிய அடிப்படையில் ஆயிரத்து 200 ரூபாவுக்குப் பெறவேண்டிய இரசாயனப் பசளைகளை வெளிக்கடைகளில் ஆயிரத்து 500 ரூபாவுக்கு பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகள் மானிய அடிப்படையில் இரசாயனப் பசளைகளை கூட்டுறவுச் சங்கங்களில் தான் பெற்றுக் கொள்ளவேண்டும். ஆனால், தற்போது வெளிக்கடைகளில் கூடிய விலைக்கு பெறக்கூடியதாகவுள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-47)

## மானாண்டி சந்தைப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

(கரவெட்டி)

திக்கம் மானாண்டி சந்தைப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவி வருவதாக அப்பகுதி மக்களும் நுகர்வோரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சந்தைப் பகுதியில் இறைச்சி, மீன்கள் ஆகியவற்றின் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாது வியாபாரிகள் ஆங்காங்கு வீசி விடுவதால் துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால் அப்பகுதி வாழ் மக்கள் பெரும் சிரமங்களையும் தொற்றுநோய் அபாயத்தையும் எதிர்கொள்வதாக கூறப்படுகின்றது.

அத்துடன் கழிவுப் பொருட்களை தெருவில் திரியும் நாய்கள் மற்றும் காகங்கள் இழுத்துச் சென்று வீதியில் போடுவதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, இதனோடு தொடர்புடைய அதிகாரிகள் குறித்த பகுதியில் கவனமெடுத்து சந்தையின் குறைபாடுகளைக் கண்டறிந்து சுகாதாரத்தை பேணுமாறு வர்த்தகர்களும், பொது மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-24)

## அலங்காரத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை முதலாம் வட்டாரம் ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகத்துடன்திருவிழாநிறைவடையவுள்ளது. (ஸ்ரீ-72)

## நெற்பயிர்களை நாசமாக்கும் கால்நடைகளால் விவசாயிகள் பாதிப்பு

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு,மறவன்புலோ பகுதிகளில் கடந்த 1999 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மக்களால் கைவிடப்பட்ட கால்நடைகள் இன்று வரை உரிமையாளர்களால் முழுமையாகப் பிடிக்கப்படவில்லை.

இதனால் கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து இப்பகுதியில் நெற்பயிர் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தும் கால்நடைகளை முழுமையாக உரியவர்கள் பிடிக்காதபடியால் நெற்செய்கையாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த வருடமும் இக்கால் நடைகளால் நெற்பயிர்கள் நாசமாக்கப்பட்டன.

இவ்வாண்டிற்கான பெரும்போக நெற்பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவிருப்பதால் இவ்வருடமாவது இக்கால்நடைகளை பட்டிகளில் அடைத்து பயிர்ச்செய்கைக்கு நாசம் விளைவிக்காது பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-37)

## தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலகத்தில் பளிங்கு கற்களினாலான உருவங்களை வடிவமைத்தல் தொடர்பான தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் பெயர் விபரங்களை கரவெட்டி பிரதேச செயலக திட்டமிடல் கிளையில் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அன்னதான மண்டப திறப்பு விழா

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு மத்தாளோடை கருமாரி அம்மன் அன்னதான மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.03 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் ஆலயத் தலைவர் மா.சந்திரலிங்கம் வரவேற்புரையினையும், சோமபால கிருஸ்ணகுருக்கள் ஆசியுரையினையும், செயலாளர் இ.ஜெஸ்ரீன் நன்றியுரையினையும் ஆற்றவுள்ளனர். (ஸ்ரீ-78)

## மரதனோட்டப் போட்டி

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் பாடசாலை முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி பாடசாலை முன்றலில் ஆரம்பமாகி வதிரிச் சந்தி, நவிண்டில் ஊடாக குஞ்சர்கடை சந்தியை வந்தடைந்து அதனைத் தொடர்ந்து நெல்லியடிச் சந்தி, கல்லிகைச் சந்தி, மந்திகைச் சந்தி, மாலுசந்தியூடாகச் சென்று கடைசியில் வதிரிச் சந்தியை வந்தடையவுள்ளது.

எனவே, இப்போட்டியில் பங்கு பற்றும் யாழ். மாவட்ட மரதனோட்ட வீரர்கள் அனைவரும் பாடசாலையில் பதிவுகளை மேற்கொள்ளலாமென்றும் தவறும் பட்சத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு போட்டி ஆரம்பமாகும் முன்னர் பதிவுகளை மேற்கொண்டு போட்டிகளில் கலந்து கொள்ள முடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-24)

## கிறிஸ்து அரசர் ஆலயத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலயத் திருவிழா கடந்த 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது.

இதில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம் பெறும். (ஸ்ரீ-72)

## யாழ்.செய்திகள்

## சின்னம் சூட்டும் விழா

(கரவெட்டி)

வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியில் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி தே.நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாவட்ட காணிப்பதிவாளர் திருமதி ச.தியாகராஜன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-24)

## புத்தூர்-வாதரவத்தை ஊடான பஸ் சேவையை ஆரம்பிக்க கோரிக்கை

(நல்லூர்)

புத்தூர் வாதரவத்தையூடாக இலங்கை போக்குவரத்திற்கு சொந்தமான பேருந்துகள் தமது சேவையினை கடந்த பல மாதங்களாக மேற்கொள்ளாததையடுத்து இப்பகுதி வாழ் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அப்பகுதி மக்கள் யாழ். நகர் மற்றும் வைத்தியசாலை,சந்தைப் பகுதிகளுக்கு பயணத்தினை மேற்கொள்ள வேண்டுமானால் 7 கி.மீ தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள பாடசாலை மாணவர்கள் குடாநாட்டிலுள்ள உயர்தர பாடசாலைகளுக்கு கல்வி கற்க செல்ல வேண்டுமானாலும் இதே நிலைதான் உள்ளது.

இதேபோல அரச திணைக்களங்களில் வேலை செய்வோர், குடாநாட்டின் ஏனைய பதிக்கு தமது சொந்த தேவைக்காக பயணிக்கும் பொது மக்களும் பல கஷ்டங்கள் மத்தியில் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து அப்பகுதியூடான பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-134)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அருள்மிகு சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம்திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதி மாலை 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)





**புலோலி புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.**

**அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி சுமங்கலா பிரபாகரன் உரையாற்றுவதையும் நிறை குடம் வைக்கும் போட்டியில் சிறார்கள் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-மருதங்கேணி செய்தியாளர்)**

# இவ்வருட இறுதிக்குள் அனைத்து மக்களும் மீள்குடியேற்றப்படுவர்

## மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

இந்த வருட இறுதிக்குள் அனைத்து இடம் பெயர்ந்த மக்களையும் அரசாங்கம் மீள்குடி யேற்றுமென மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள கதிர்காமர் நலன்புரி நிலையத்திற்கான விஜயமொன்றை மீள்குடியேற்ற அமைச்சர் மேற்கொண்ட வேளையிலேயே இதனைக் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையை இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

243,787 மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். கதிர்காமர் நலன்புரி கிராமத்தில் 7 ஆயிரத்து 156 இடம் பெயர் மக்களும் ஆனந்த குமாரசுவாமி நலன்புரி கிராமத்தில் 9ஆயிரத்து132 இடம் பெயர் மக்களும் இன்னமும் உள்ளனர். இவர்கள் முல்லைத்தீவுவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

ஏனைய மாவட்டங்க்ளைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் ஏற்கனவே மீள்குடியேற்றப் பட்டுள்ளனரெனவும் அவர் கூறினார்.

கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கை காரணமாகவே மீள்குடியேற்றம் தாமத மடைவதாக தெரிவித்த மீள்குடியேற்ற அமைச்சர் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட முன்னர் கண்ணிவெடிகள் அகற்றப் படவேண்டுமெனவும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2,4)

# கஞ்சா பொதியுடன் சந்தேக நபர் கைது

பேராதனை கெலி ஓயா பகுதியில் கஞ்சா போதைப் பொருள் பொதியிடலில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடம் இருந்து 104 கஞ்சா பைக்கற்றுக்களும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. சந்தேக நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடி, மீண்டும் சேவையில் இணைந்து பின்னர் தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டவர் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர். தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் குறித்த சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)


இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



பதினேழாம் திருவிழா (23.06.2011)

இணுவைக் கந்தா உன் அருள் திறன் வேண்டுவோம்

அனல் ஆறு பொறியாகி புனல் மீது
அரவிந்த மலர் மேலே தவழ்ந்த வேலா
அன்னையும் அன்புக்கரங்களால் ஒன்றாய்
அணைக்கவே ஆறுமுகனாகவே திகழ்ந்த வேலா
வேற்றுப் படை அழித்து
ஆற்றுப்படை தந்து
பாட்டுடை தலைவனாய் உன்
திருப்புகழ் பாடிடும் பக்தரைக் காக்கவே
பன்னிரு கரம் கொண்டு பரிந்தருள் புரிந்திடவாராய்

இணுவை செல்வம் பவான்

(5114)

17 ஆம் திருவிழா உபயகாரர்


# இந்தியா மகாவசம்சத்திலிருந்தே தனது வரலாற்றை அறிந்து கொண்டது

## உதயகம்மன்பில தெரிவிப்பு

அண்டைநாடான இந்தியா எமது மகாவம் சத்திலிருந்தே தனது வரலாற்றைத் தெரிந்து கொண்டுள்ளது என்று மேல் மாகாண சபை அமைச்சர் உதயகம்மன்பில தெரிவித்துள் ளார்.

2500 வருடங்களாக தொடர்ச்சியாக தனது வரலாற்றை எழுதி வைத்திருக்கும் ஒரே நாடாக உலகில் இலங்கை மட்டும் தான் காணப்படுகின்றது. அந்தளவுக்கு நீண்ட கால வரலாற்றுப் பதிவைக் கொண்டவர்கள் நாங்கள் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் முக்கியஸ்தரும் மேல்மாகாண அமைச்சருமான உதயகம்மன்பில தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளார்.

ஹோமாகமவில் நடைபெற்ற இராணுவத்தினர் தொடர்பான வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் மகாவம்சத்தைப் படித்துத் தான் உலகின் இன்னொரு வல்லரசாகத் துடிக்கும் இந்தியாகூட தனது நாட்டில் வாழ்ந்த பேரரசன் அசோகன் பற்றிய பல விடயங்களைத் தெரிந்து கொண்டது. நம் நாட்டின் வரலாறு அந்தளவுக்குத் தெளிவாக நீண்டகாலம் தொட்டு எழுத்து வடிவில் பதிக்கப்பட்டு வந்துள்ளது.

நீண்டகாலமாகத் தொடர்ச்சியாக வரலாற்றினை எழுத்து வடிவில் பதிந்து வைப்பதில் இலங்கைக்கு அடுத்ததாக சீன நாடு விளங்குகின்றது.

இந்தியாவில் போற்றப்படும் இராமாயணம் நம் நாட்டின் இராவணனின் வீரதீரங்களைத் தான் எடுத்துக் கூறுகின்றது. அவனது அறிவுசார் புலைமை மற்றும் ஆற்றல்கள் அதில் முக்கியத்துவத்துடன் விபரிக்கப் படுகின்றன.

உலகில் மாவீரர்கள் ஒரே இரவில் உதிப்பதில்லை. சிலர் வாழ்வின் கடைசித் தருணத்தில் தான் மாவீரர்களாக மாற்றம் பெறுகின்றனர். ஆனால் உலகில் மாவீரர்களாகப் போற்றப்பட வேண்டியவர்களில் நம் நாட்டின் இராணுவத்தினரும் உள்ளடக்கப்படத் தகுதியானவர்கள் என்றும் அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மேலும் 20 அகதிகள் பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்படவுள்ளனர்

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட மேலும் 20 பேர் இந்த மாத இறுதிக்குள் இலங்கைக்குத் திருப்பி அனுப் பப்படவுள்ளனர்.

இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர்களிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 20 பேரையும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு பிரித்தானிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

திருப்பி அனுப்பப்படுவோர் எத்தகைய குற்றங்களிலாவது தொடர்புடையவர்களா என்பது குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை செய்ய திட்டமிட்டுள்ளது.

குறிப்பாக, லண்டனில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான போராட்டங்களில் பங்கேற்றுள்ளனரா, விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவர்களா என்று இவர்களிடம் விசாரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனவே இவர்களிடம் விசாரணை மேற்கொள்ள சிறப்புப் பிரிவு ஒன்றை விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வு திணைக்களம் நிறுவியுள்ளது.

அதேவேளை அகதிகளை நாடுகடத்தும் முடிவை உடனடியாக நிறுத்துமாறு அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியன விடுத்த வேண்டுகோளை பிரித்தானியா நிராகரித்துள்ளது. கடந்த வாரம் பிரித்தானியா 26 அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வீதி திருத்த வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டதால் பயணிகள் பாதிப்பு

பூநகரி நாகதேவன்துறை வீதியிலிருந்து கறுக்காய் தீவு வரை பயணிக்கும் இரண்டரைக் கிலோ மீற்றர் நீளமான வீதிக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன் நிதி ஒதுக்கப்பட்டு வீதி திருத்தும் ஒப்பந்தகாரரினால் வீதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று வரை முற்பகுதியில் ஒரு கிலோ மீற்றர் வீதியும் பிற்பகுதியில் அரைக் கிலோ மீற்றர் வீதியும் தாரூற்றப்பட்டு செப்பனிடப் பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படாமல் வீதி ஒப்பந்தக்காரர்கள் நிறுத்தி விட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் மக்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து திருத்தப்படாது கைவிடப்பட்ட மீதமாகவுள்ள வீதியை செப்பனிட்டுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-84)

# ஜாஎல தண்டுகம ஓயாவிலிருந்து சடலமொன்று மீட்பு

(ஜாஎல)

ஜாஎல தண்டுகம ஓயாவிலிருந்து சடலமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஒருவர் நேற்று அதிகாலை தண்டுகம பாலத்திற்கு அருகில் மிதந்த நிலையில் சடலமொன்று இருப்பதாக தகவல் வழங்கியதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலம் ,நான்கு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்த ஒருவருடையதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேக்கின்றனர்.

சடலத்தில் வெட்டுக் காயங்கள் சில காணப்படுகின்ற போதிலும் அந்த காயங்கள் சடலம் மிதந்து கொண்டிருந்த போது ஏற்பட்டவையா என்பது குறித்த தீர்மானித்திற்கு வரமுடியாதென பொலிஸார் கூறினர்.

குறிப்பிட்ட வயதிலான ஒருவர் அண்மித்த பிரதேசங்களில் காணாமல் போயுள்ளாரா என்பது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் . (ஸ்ரீ-2)


புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...



சரவணா ரெக்ஸ்

770, 772, கே.கே.எஸ். வீதி
(தட்டா தெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 0421 Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம். 021 222 1723



Email: nallur.saravana@gmail.com







லண்டன் மெட்ரோ பொலிற்றன் கல்லூரி யாழ்ப்பாண அரசடி வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் கொடியேற்றி வைப்பதையும் நாடாவை வெட்டி கல்லூரியை திறந்து வைப்பதையும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் ஓங்காரமூர்த்திக்கு கல்லூரியின் பணிப்பாளர் எஸ். ஸ்ரீநிமல் பாடநெறி விபரங்களை கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# த.தே.கூட்டமைப்பு மீதான தாக்குதலை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## ஜனநாயக மக்கள் முன்னணி அறிவிப்பு

யாழ். அளவெட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான தாக்குதல் சம்பவத்தை கண்டித்து இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தலைமையில் நாளை கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டமொன்று நடாத்த உள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

யாழ். அளவெட்டியில் கடந்த 17 ஆம் திகதி மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலின் போது அங்கு சிவில் உடையில் நுழைந்த கும்பல் அங்கிருந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தியது. அது மட்டுமின்றி அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தாக்க முற்பட்டனர்.

எனவே இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நடைபெறவுள்ள இந்த ஆர்ப் பாட்டத்துக்கு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் தலைமையிலான ஜ.ம.மு. ஆதரவை வழங்கும் எனவும் குமரகுருபரன் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மதகுகளை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(பூநகரி)

பூநகரி சங்குப்பிட்டி வீதியிலிருந்து பிரிந்து செல்லும் "விநாசி ஓடை" பிரதான வீதி சேதமடைந்தும் மதகுகள் உடைந்த நிலையிலும் காணப்பட்டது.

இவ்விடயம் பற்றி பொது அமைப்புக்கள் உரியவர்களுக்கு சுட்டிக்காட்டியிருந்தும் இது வரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

இவ்விடயத்தைக் கருத்தில் எடுத்துக் கொண்ட "விநாசி ஓடை" கிராம முன்னேற்றச் சங்கம் மற்றும் பூநகரிப் பகுதியில் இருந்து யாழ். நகர் அபிவிருத்திக்கு கிரவல்களை ஏற்றிச் செல்லும் ஒப்பந்தகாரர்களும் இணைந்து 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை செலவிட்டு 8 கிலோ மீற்றர் வீதியை புனரமைத்தனர். புனரமைப்பு பணிக்காக ஆயிரத்து 200 லோட் ஊரிக் கிரவல் பரப் பப்பட்டுள்ளது.

இப் புனரமைப்புப் பற்றி இப்பகுதியால் கிரவல்கள் ஏற்றி பயணிக்கும் வாகன உரிமையாளர்கள் தெரிவிக்கையில், வீதி புனரமைப்பு ஓரளவு பூர்த்தி அடைந்திருந்தாலும் இவ் வீதியில் பல மதகுகள் பலத்த சேதமடைந்த நிலையில் இருப்பதால் கனரக வாகனங்களில் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு இம் மதகுகளை புனரமைப்பதன் மூலம் வீதி போக்கு வரத்தினை எதுவித சிரமமுமில்லாமல் மேற்கொள்ள வழிவகை செய்யும்படி கேட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் மதகுகளை திருத்தும் பணிகளை ஆரம்பித்து போக்குவரத்தினை சீராக மேற்கொள்ள ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-84)

# கிழக்கு மாகாண பாடசாலைகள் இயல்பு நிலைக்கு திரும்பின

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையயடுத்து கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றங்கள் இடை நிறுத்தப்பட்டதால் கிழக்கு மாகாண பாடசாலைகள் இயல்பு நிலைக்குத் திரும்பின.

டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஆசிரியர் இடமாற்றங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளதையடுத்து மாணவர்கள் வழமைபோல பாடசாலைகளுக்குச் சமுகமளித்ததுடன் ஸ்தம்பித நிலையில் காணப்பட்ட பாடசாலைகள் வழமை போன்று இயங்க ஆரம்பித்துள்ளன.

இதேவேளை இடமாற்றங்கள் இடை நிறுத்தப்பட்ட செய்தி வெளியானதையடுத்து சம்மாந்துறை, கல்முனை பிரதேசங்களில் ஆசிரியர்கள் பட்டாசு கொளுத்தி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட சகல ஆசிரியர் இடமாற்றங்களும் இவ்வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை இடை நிறுத்தப்படுவதென்ற பணிப்புரை ஜனாதிபதியினால் கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் கூறினார்.

இவ்விடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டும் என கிழக்கு மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் சகல ஆளும் கட்சி அரசியல்வாதிகளும் ஆளுநரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் இது பலனளிக்கவில்லை. இதனையடுத்து ஜனாதிபதியிடம் இது குறித்து முறையிட்டதையடுத்து தற்போது இவ்விட மாற்றம் பிற்போடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)



யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பதிகாரி ஏ.ரூபசிங்கத்தின் நெறியாள்கையின் கீழ் யாழ். மாவட்ட இராணுவப் படையணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் பலாலி இராணுவத் தலைமையக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறந்த ஆரம்பிப்பாராளராக கடமையாற்றியமக்காக இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் விளையாட்டு ஆரம்பிப்பாளர் ரி. கருணாகரனுக்கு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க சிறப்பு விருது வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவு அமைப்பு

## தேர்தல் ஆணையாளர் நாயகம் நடவடிக்கை

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த தேர்தல்கள் திணைக்களத்துடன் இணைந்த பொலிஸ் முறைப்பாட்டு பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி முதல் செயற்பட்டு வரும் இந்த பொலிஸ் முறைப்பாட்டு பிரிவானது சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் இயங்குவதாக அவர் மேலும் கூறினார்.

இதன்படி ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் மற்றும் பிரதேசங்களில் இடம்பெறும் அரசியல் வன்முறை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு பதிலாக அப்பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் திணைக்களத்தில் இயங்கும் பொலிஸ் முறைப்பாட்டு பிரிவிற்கு அறிவிக்க முடியும்.

இது தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்தினால் உடனடியாக வன்முறைகள் ஏற்படுவதை தடுக்க முடியும். அத்துடன் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இந்த பொலிஸ் முறைப்பாட்டு பிரிவானது தேர்தல் நிறைவு பெறும் வரை செயற்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-4)

# தேசிய விவசாயிகள் வார நிகழ்வுகளை இம்முறை வவுனியாவில் நடத்த தீர்மானம்

(கொழும்பு)

தேசிய விவசாயிகள் வாரத்தினை இம்முறை வவுனியாவில் நடத்துவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான கலந்துரையாடல் வவுனியா தம்பா விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு எதிர்வரும் ஜுலை மாதம்20 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை வவுனியா விவசாயப் பண்ணை மற்றும் விவசாயக் கல்லூரி ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் சிறந்த விவசாயிகள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவ்விழாவின் போது மலிவு விலையில் விவசாய உபகரணம் மற்றும் உர வகைகள் என்பன விற்பனை செய்யப்படவுள் ளன. இதற்கான ஏற்பாடுகளை வவுனியா விவசாய நிலையம் மேற்கொண்டு வருகின்றது. (ஸ்ரீ-3)


# முள்ளிவாய்க்கால், வட்டுவாகலில் தொடரும் இரும்புக் கடத்தல்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு-வட்டுவாகல், முள்ளிவர்ய்க்கால், பிரதேசங்களில் இருந்து இரும்பு மற்றும் தளபாடப் பொருட்கள் சட்டவிரோதமாக ஏற்றிச் செல்லப்படுகின்றன. இச்சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் ஆகிய பிரதேசங்கள் யுத்தத்தினால் அழிவடைந்து காணப்படுகிறது. இங்கு மக்கள் இதுவரை மீள் குடியேற்றப்படவில்லை.

இவ்வாறான நிலைமையினை தென்னிலங்கை நபர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி திருட்டுத்தனமாக இப்பொருட்களை ஏற்றி அவற்றை விற்றுப் பணமாக்க முயற்சித்து வருகின்றனர்.



இவ்வாறு தென்னிலங்கை நபர்கள் நான்கு வாகனங்களில் இப்பொருட்களை திருட்டுத்தனமாக ஏற்றிக் கொண்டு ஓமந்தைச் சோதனைச்சாவடியைக் கடக்க முற்படுகையில் இராணுவத்தினால் பிடிக்கப்பட்டனர்.

பிடிக்கப்பட்ட இந் நபர்களிடமிருந்து இரும்புப் பொருட்களை கைப்பற் றியுள்ளதுடன் இவர்கள் மேலதிக விசார ணைக்களுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த 20 ஆம் திகதி காலையிலும் இரும்பு மற்றும் தளபாடப் பொருட்கள் ஏற்றியபடி சென்ற 9 கனரக வாகனங்களை பொலிசார் கைப்பற் றினர்.

இதனையடுத்து தென்னிலங்கை நபர்களால் இரும்புகள் ஏற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

(ஶ்ரீ-4-15)

## பதவியேற்பு நிகழ்வும் பாராட்டு நிகழ்வும்

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் 2011, 2012 ஆம் ஆண்டிற்கான பதவியேற்பு நிகழ்வும்சேவை நலன் பாராட்டு நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 6மணிக்கு கோப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் வே.வேல்நிதி தலைமையில் கோண்டாவில் புகையிரத வீதியிலுள்ள புதிய தலைவராக பதவியேற்கும் லயன் க.பாலசுந்தரத்தின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக இரண்டாவது மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர்னாண்டோ, லயன் சீமாட்டி டில்காணி பெர்னாண்டோ மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகத்தின் சேவை நலன்பாராட்டும் நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (ஶ்ரீ-134)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

அராலி சரஸ்வதி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச செயலாளர் சு.புத்திசிகாமணியும் சிறப்பு விருந்தினராக இவ் முன்பள்ளியின் ஆரம்பகால ஆசிரியை சிவமணி சிவகேசன் மற்றும் க.நவரட்ணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-4)

# தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியாது

## போக்குவரத்து அமைச்சர் அறிவிப்பு

அரசாங்கத்தின் தீர்மானம் இறுதியானதாகும். 15 வீதத்தால் தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியாது. மீறி தனியார் பஸ் உரிமையாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டால் அந்தசவாலை எதிர்கொள்ள அரச போக்குவரத்து சேவை தயாராக உள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் குமார வெல்கம மேற்கண்டவாறு கூறினார். அவர் இங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அடிப்படை பஸ் கட்டணமான 6 ரூபாவை 2 ரூபாவால் அதிகரித்து 8 ரூபாவாக உயர்த்தும் படியும் ஏனைய கட்டணங்களை 15 வீதத்தால் அதிகரிக்கும் படியும் தனியார் பஸ் உரிமையளர் சங்கம் கோரி வருகின்றது.

இந்த கட்டண அதிகரிப்பை அரசாங்கத்தினால் அனுமதிக்க முடியாது. 7 வீதமான அதிகரிப்பு தொடர்பில் பஸ் உரிமையாளர் சங்கத்திற்கு விருப்பம் இல்லை. எனவே பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு பஸ் உரிமையாளர்களின் 15 வீதமான கட்டண அதிகரிப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்க உள்ளதாக தனியார் பஸ் சங்கம் அறிவித்துள்ளது. இப்போராட்டத்தை எதிர்கொள்ள அரச போக்குவரத்து சேவைகள் தயார் நிலையில் உள்ளது. குறிப்பிட்ட தினத்தன்று அனைத்து அரச போக்குவரத்து பஸ்களும் சேவைகளும் ஈடுபடுத்தப்படும். மேலும் பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இதன் பின்னர் போதியளவு சேவையை வழங்க முடியும் என்றார். (ஶ்ரீ-4)

# பூநகரிப் பிரதேசத்திலுள்ள கிராமங்கள் தோறும் டெங்கு ஒழிப்பு பணிகள்

(பூநகரி)

தேசிய டெங்கு ஒழிப்புவாரம் கடந்த 20ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதனையொட்டி பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் பூநகரிப் பிரதேசத்திலுள்ள கிராமங்கள்தோறும் டெங்கு ஒழிப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய நேற்றையதினம் பூநகரி வாடியடிப் பகுதியிலும் இன்று ஜெயபுரம் நகரிலும் நாளை பள்ளிக்குடா கிராமசேவகர் பிரிவிலும் நாளை மறுதினம் நாச்சிக்குடா கடற்கரைப் பிரதேசத்திலும் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கொம்பன் பிரதேசத்திலும் இப்பணிகள் நடைபெறவுள்ளன.

மேற்படி துப்புரவுப் பணிகளை சுகாதாரப் பகுதியினர்,பொலிஸார், இராணுவத்தினர், பூநகரி பிரதேச சபையினர் உள்ளிட்ட 50 இற்கு மேற்பட்டோர் குழுவாக இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஶ்ரீ-84)

# தடுப்பு முகாம்களிலிருந்த அறுநூறு பேர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பிவைப்பு

ஓமந்தை மற்றும் பூசா தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சுமார் 600 பேர் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் மிக நீண்ட காலமாக பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் ஓமந்தை மற்றும் பூசா தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும் அவர்களுக்கு எதிரான வழக்குகளைத் தாக்கல் செய்ய போதுமான சாட்சிகள் மற்றும் தடயங்கள் இன்மையால் சந்தேக நபர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் பணிப்புரை விடுத்திருந்தது.

ஆயினும் நீண்டகாலமாக அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக அவர்களைப் புனர்வாழ்வுக்குட்படுத்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ள அனைவரும் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டு ஒருவருடகாலம் வரையான புனர்வாழ்வு மற்றும் தொழிற் பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டதன் பின்பே அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிய வந்துள்ளது. (ஶ்ரீ-4)

# ஒப்பந்த வேலைகளை இதுவரை மேற்கொள்ளாத ஒப்பந்தகாரர்களின் வேலைகள் இரத்து

## வடமாகாண ஆளுநர் அதிரடி நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஒப்பந்தம் செய்யப்பட்டும் இன்னமும் புனரமைக்கப்பட்டாதுள்ள வீதிகளை விரைவில் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு மாகாண ஆளுநரின் மாநாட்டு மண்டபத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமாகிய முருகேசு சந்திரகுமாரின் வேண்டுகோளுக்கிணங்க நடைபெற்ற இக்கூட்டத்தில் இவ்வருடத்திற்கான வீதி, கட்டட வேலைகள் சம்பந்தமான மீளாய்வு நடைபெற்றது.

அத்தோடு 70 வீதமான வேலைகள் இன்னமும் நிறைவேற்றப்படாது இருப்பதாக ஆளுநர் சுட்டிக்காட்டியதோடு ஒப்பந்த காலத்தில் வேலையை மேற்கொள்ளாத ஒப்பந்தகாரர்களுடைய வேலைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டது.

சிலவேலைகளை செய்து முடிப்பதற்கு 2 மாத கால அவகாசம் வழங்கப்பட்டதுடன் இரத்துச் செய்யப்பட்ட வேலைகள் மீளவும் ஆரம்பிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டுமென உரிய அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டது.

வேலை முடிக்கப்படாது அதற்குரிய நிதிகள் எடுக்கப்பட்டதாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியபோது இது சம்பந்தமான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு ஆளுநரால் பணிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள், வேலை ஒப்பந்தகாரர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ஶ்ரீ-3)

# சில இணையத் தளங்கள் முடக்கப்பட்டதாக முறைப்பாடு

(கொழும்பு)

சில இணையத்தளங்கள் முடக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராவுன்ட் விவ்ஸ், விகல்ப ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நசனல் ஆகிய இணையத்தளங்கள் சில மணித்தியாலங்களுக்கு முடக்கப்பட்டிருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவை தொழில் நுட்பகோளாறு காரணமாக முடக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வியம் குறித்து ஆராய்ந்து வருவதாக ட்ரான்பெரன்ஸி இன்டர்நசனல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இணையத்தளத்திற்குள் பிரவேசிக்க முடியாத நிலை சில மணித்தியாலயங்களுக்கு நீடித்ததாக கிரவுண்ட்விவ்ஸ் இணையத்தின் இணை ஆசிரியர் நெஜல் நுகெவெல தெரிவித்துள்ளார். தொழில்நுட்ப கோளாறு காரணமாக இணையத்தளம் முடக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# ஆயுதக் கொடுக்கல்- வாங்கல் மோசடி அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

## ஐ.தே.க.கோரிக்கை

(கொழும்பு)

ஆயுதக் கொடுக்கல்- வாங்கல் மோசடி குறித்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இராணுவத் தளபாட கொடுக்கல்- வாங்கல் மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நீதிவான் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

உயர் இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அறிக்கை குறித்த தகவல்களை வெளியிட முடியாது எனவும் அறிக்கையை வெளியிடுவதன் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடுமென ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஆயுத கொடுக்கல்- வாங்கல் மோசடிகள் தொடர்பிலான தகவல்களை வெளியிடுவதன் மூலம் எவ்வாறு தேசியப் பாதுகாப்புக்கு எவ்வாறு அச்சுறுத்தல் ஏற்படும் என திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அண்மையில் பொலிஸாருக்கும் பணியாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதல் சம்பவம் குறித்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தாக்குதல் சம்பவம் குறித்து ஆராய்வதற்காக மஹானாம திலகரட்ன தனிநபர் ஆணைக் குழுவினை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

காலத்திற்கு காலம் அரசாங்கம் சில சில ஆணைக்குழுக்களை நியமிப்பதாகவும் அவற்றின் அறிக்கைகள் பற்றியோ எடுக்கப்படும் நடவடிக்கை பற்றியோ தகவல்கள் வெளியிடப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## குருதிக்கொடையாளர்கள் கௌரவிப்புவிழா

உலக குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் விழா எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.பொது வைத்தியசாலை பிராந்திய இரத்த நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## சங்காபிஷேகம்

பொலிகண்டி ஸ்ரீ பேச்சி அம்மன் ஆலய 108 சங்காபிஷேக நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விசேட பூசைகளும் நண்பகல் 12 மணியளவில் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடைபெறவிருப்பதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-48)

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களை அதிகரிப்பதற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான உயர் கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது உள்ளூர் மாணவர்களின் வாய்ப்புகளை குறைக்கும் என மேற்படி ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தற்போது 0.5 சதவீதமாகவுள்ள வெளிநாட்டு மாணவர்களுக்கான ஒதுக்கீடு பல்கலைக்கழக மானியங்கள் ஒன்றியத்தின் சுற்றுநிருபத்தின்படி 5 சதவீதமாக அதிகரிக்கப்படவுள்ளதாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் மேற்கொண்டுள்ள மாற்றங்களால் குறைந்த பட்சம் 1100 வெளிநாட்டு மாணவர்கள் உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்படுவர். இது உள்ளூர் மாணவர்களுக்குப் பெரும் அநீதியாகும்.

ஏனெனில் உயர்தரப் பரீட்சையின் போட்டித் தன்மை காரணமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பை இழக்கின்றனர் என அவர் தெரிவித்தார்.

இப்போது பல்கலைக்கழகங்களில் 2000 இற்கும் அதிகமான மாணவர்களுக்கு வெற்றிடம் உள்ளது. அரசாங்கம் கூறுவது உண்மையானால் முதலில் இவ்வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ரஜட்ட பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்திற்கு 170 வெற்றிடங்களும் றுகுணு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானபீடத்திற்கு 12 வெற்றிடங்களும் பெரதெனியா பல்கலைக் கழகத்தில் சுகாதார, விஞ்ஞான பீடத்திற்கு 114 வெற்றிடங்களும் இருப்பதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# யாழ். புகையிரத நிலைய நிர்மாணப்பணிகள் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

யாழ்ப்பாண புகையிரத நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை யில் நேற்றுமுன்தினம் போக்குவரத்து அமைச்சும் இலங்கை வங்கியும் கைச்சாத்திட்டுள்ளன.

இத்திட்டதிற்கான செலவீனமாக 8 கோடியே 70 இலட்ச ரூபா ஏற்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்தத் தொகையே இலங்கை வங்கி வழங்குகிறது.

உத்துறு மித்துறு என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் புகையிரத நிலைய நிர்மாணப் பணிகள் உள்ளூர் ஒப்பந்தகாரரிகளிடம் கையளிக்கப்படுமென்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. (ந)

# சவுதியில் 13 வருடங்கள் தடுத்து வைக்சுப்பட்டிருந்த பெண் மீட்பு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் வீடொன்றினுள் சம்பளம் வழங்கப்படாது 13 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தாகக் கூறப்படும் இலங்கை பணிப் பெண்ணொருவர் அந்நாட்டு அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளார்.

பொலநறுவை பகுதியை சேர்ந்த 45 வயதான பெண்ணொருவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தாயான இவர் தொழில் நிமித்தம் கடந்த 1997 ஆண்டு சவுதி அரேபியாவுக்கு சென்றிருந்தார்.

வலுக்கட்டாயமாக பணியில் ஈடுபடுத்தியமை தொடர்பில் குறித்த வீட்டின் உரிமையாளர் சவுதி அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக அரேபிய செய்தி சேவை தெரிவித்துள்ளது.

இந்த பெண்ணுக்கு சம்பள நிலுவைகள் வழங்கப்படும் வரை அவர் ஜாசன் நகரிலுள்ள சமூக சேவைகள் நிலையமொன்றில் தங்கியிருப்பார் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பெண்ணுக்கு 60 ஆயிரம் ரியால் சம்பள நிலுவை வழங்கப்பட வேண்டியுள்ளதாக சவுதி அரேபிய அதிகாரிகள் அரேபிய செய்தி சேவைக்கு குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# வாக்காளர் பெயர்ப்பட்டியல் திருத்தப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் திருத்த நடவடிக்கைக்காக கிராம சேவகர்கள் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்படுவதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட ரீதியில் தகவல்கள் திரட்டப்படுவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி. சுமனசிறி குறிப்பிட்டார்.

இந்த தகவல்கள் திரட்டும் நடவடிக்கையில் அரசியல் கட்சி பிரதிநிதிகளை ஈடுபடுத்த வேண்டியுள்ள போதிலும் குறித்த கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் பங்கேற்பதில்லை என அவர் தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத்தேர்தல் நடைபெறாத 55 மன்றங்களுக்குமான தேர்தல் நடத்தப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை 55 மன்றங்களுக்குமான தேர்தல் அடுத்த மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# அரச மொழிக் கொள்கைகளுக்கமைய அதிகாரிகள் செயற்படுவதில்லை

## மாவட்ட செயலகங்களிலிருந்து முறைப்பாடு

அரச மொழிக் கொள்கைகளுக்கு அமைய அதிகாரிகள் செயற்படுவதில்லை என முறைப்பாடு கிடைத்துள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தெரிவித்துள்ளது.

சிங்கள மொழிபெயர்ப்பின் போது பிரச்சனைகள் எதிர்கொள்வதாக யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட சில பிரதேசங்களில் மாவட்ட செயலகங்களிடமிருந்து முறைப்பாடு கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்கிரம சிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை பொறுப்பான அதிகாரிகள் உரிய முறையில் செயற்படுவதில்லை என்பதை அரச மொழிக் கொள்கை பற்றி தெளிவுபடுத்தும் வகையில் நடைபெறும் வேலைத் திட்டங்களில் பிரதேச செயலாளர்கள் சுட்டிக் காட்டியதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றுநிருபம் மூன்று மொழிகளிலும் காணப்படாமை காரணமாக தாம் பாரிய பிரச்சனைகளுக்கு உள்ளாவதாக அவர்கள் தெரிவித்ததாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# ஈராக்கில் நடைபெற்ற உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டுள்ளது

ஈராக்கில் இலங்கையர்களினால் நடத்தப்பட்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அதிகாரிக்ள் இருவர் ஈராக்கிற்கு சென்று போராட்டம் நடத்தி வரும் இலங்கையர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்தே இப்போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நிலுவைச் சம்பளத்தை வழங்குமாறு கோரி 41 இலங்கையர்கள் ஈராக்கில் போராட்டம் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் அல் அமரா பிரதேசத்தில் 11 பேரும் பக்தாத்தில் 30 பேரும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வந்தனர்.

உண்ணாவிரதப் போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் தொடர்பில் இலங்கை அதிகாரிகள் அந்நாட்டு உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# யானைகளால் ஏற்படும் அழிவுகளுக்கு காப்புறுதி வழங்கும் திட்டம்

யானைகளால் ஏற்படுகின்ற அழிவுகளுக்கு காப்புறுதி வழங்கும் திட்டமொன்றை அறிமுகப்படுத்த விவசாய காப்புறுதி சபை திட்டமிட்டுள்ளது.

வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் விவசாய காப்புறுதி சபை இணைந்து இந்த காப்புறுதி திட்டத்தினை நடைமுறைப்படுத்த உள்ளதாக விவசாய காப்புறுதி சபையின் தலைவர் சட்டத்தரணி சுமனா ஆரியதாஸ் குறிப்பிட்டார்.

யானைகளினால் பொருட்கள் மற்றும் பயிர்ச் செய்கைகளுக்கு சேதம் விளைவிக்கப்படுகின்றபோது பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான புதிய திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

415. எல்லைகள் அற்ற செய்தி நிருபர்கள், அதன் 2010 பத்திரிகைச் சுதந்திரச் சுட்டியில் 175 நாடுகளுக்கிடையே இலங்கைக்கு 158ஆவது இடத்தை வழங்கினர், இந்நிலை 2009 இனைவிட நான்கு இடங்கள் முன்னேற்றமுடையதாகும். 2010 டிசம்பர் 30ஆம் திகதி, அது பின்வருமாறு கண்டனம் தெரிவித்தது. இலங்கையின் நிலைவரம் பற்றிய பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் சுயாதீன ஊடக அறிக்கை விடுப்பதைத் தடுக்க அரசாங்கம் புதிய வடிவத்தினாலான பத்திரிகைத்தணிக்கை மற்றும் தடைகளைப் பிரயோகிக்கிறது. உடல் மீதான தாக்குதல்கள், அச்சுறுதல்கள் மற்றும் சிறை வைத்தல் போன்ற சம்பவங்களின் எண்ணிக்கை குறைந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும் என்ற போதிலும், நிஜச்செய்தி ஆசிரியர் சுதந்திரம் மீள ஏற்படுவதை அதிகாரிகள் தடுப்பது கவலைக்குரியதாகும்...

416. இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் இரு அளவு கோல்களைக் கொண்டு அளக்கப்படுகிறது. முதலாவது ஊடகவியலாளர்கள் இலங்கையில் சுதந்திரமாகப் பிரசுரிக்கும் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு அதற்காக அவசர கால ஒழுங்குவிதிகளை அகற்றுவது தேவைப்படும். அத்துடன் பி...ஏ சட்டம் சர்வதேச தரங்களுடன் ஒத்திருப்பதற்காக அதற்கான திருத்தங்களை கொண்டுவருவது. வெளிநாடுகளுக்குத்தப்பிச் சென்றுள்ள ஊடக வியலாளர்கள் திரும்பி வருவதற்கு போதியளவு பாதுகாப்பு உண்டென்பதாகக் கருதி, தம் நாட்டில் அவர்களது தொழிலை



நடத்துவதற்கு முடியும்போது இரண்டாவது அளவு கோலின் தேவை நிறைவு பெறும்.

**140) உ. புலம்பெயர்ந்த தமிழர்**

417. பல தசாப்தங்களாக எல்.ரி.ரி.ஈ. இற்கு உள மற்றும் பொருள்ரீதியில் ஆதரவை வழங்கி வந்த புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் பாரியபகுதியினர் தமிழர்களின் நிலைபற்றித் தொடர்ந்தும் ஆதங்கம் கொண்டு யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி எதிர்ப்புத்தெரிவிப்பது எதிர்பார்க்கக் கூடியதொன்றேயாகும். ஆயினும் எல்.ரி.ரி.ஈ. புரிந்த உரிமைமீறல்கள் மற்றும் வன்னியில் நேர்ந்த மனிதாபிமான அனர்த்தத்திற்கான அதன் பங்களிப்பைபற்றி அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கும்போது புலம்பெயர்ந்தோரிடையே கணிசமானவர்கள் நிலைத்தகவுள்ள சமாதானத்தை அடைவதற்கு மேலும் தடைகளை ஏற்படுத்துகின்றனர்.

418. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின்போது, வன்னியில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை பணயக்கைதிகளாக வைத்திருந்தது, அவர்கள் தப்பிப்போவதைத் தடுப்பதற்காக வன்முறையைப் பிரயோகித்தது அத்துடன் தம் அணிகளுக்கு வலுக்கட்டாயமாகச் சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டது ஆகியவற்றை உள்ளிட்ட எல்.ரி.ரி.ஈ. இன் பல்வேறு மீறல்கள் மத்தியிலும் புலம்பெயர்ந்தவர்களுள் பலர் மௌனம் சாதித்தனர்.இறுதியில், போரில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரிடையே சிக்குண்டு தவிக்கும் பொதுமக்களின் துயரத்தைவிட "தமிழ் ஈழ" அரசியலாய் அமைந்த அரசினைப் பாதுகாப்பதில் புலம்பெயர்ந்தோர் பகுதியினர் அதிகஅக்கறை கொண்டிருந்தனர்.

419. தமது நோக்கத்திற்காக பணம்சேர்தற்காக, வெளிநாடுகளில் குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகங்களுக்கிடையே எல்.ரி.ரி.ஈ. மாபியா அணுகுமுறையை கடைப்பிடித்தது. எல்.ரி.ரி.ஈ. இனருக்கு ஆதரவாயிருந்த புலம்பெயர் தமிழர்களுள் கணிசமானவர்கள் இவ்வாறாக யுத்தத்திற்கு தூபம் போடுவதில் ஒரு பங்களிப்பைச் செய்தனர். எல்.ரி.ரி.ஈ.இன் முன்னாள் பாதுகாப்பு அமைப்புக்கள், தனியார் வர்த்தகங்கள் மூலம் தொடர்ந்து செயற்படுவதோடு சிலகோயில் வருமானங்களையும் கட்டுப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்புக்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும். மேலும் புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து மற்றும் வேறு இடங்களில் எல்.ரி.ரி.ஈ. சேகரித்து வைத்துள்ள நிதிகள் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினரிடையே யுத்தத்தினால்பாதிப்படைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக பெறப்பட வேண்டும்.

420. புலம் பெயர்ந்த தமிழ் உறுப்பினர்கள், அவர்கள் எல்.ரி.ரி.ஈ. இக்கு அளித்த நிபந்தனையற்ற ஆதரவு மற்றும் அவர்களது தீவிர தமிழ்த் தேசிய வாதம் காரணமாக உண்மையிலேயே இலங்கைத்தமிழ்ச் சமூகத்தினரிடையே பிளவை ஏற்படுத்தியுள்ளதோடு, வினோதமாக சிங்கள -தேசிய வாதத்தை வலுப்படுத்தியுள்ளனர். ஒரு பொதுவான தாய்நாட்டைக் கொண்டுள்ள ஏனையவர்களிடம் வெளிநாடுகளில் வாழ்பவர்களை உள்ளிட்ட அதன் சகல இனத்துவச் சமூகங்களும் ஒவ்வாருவரினதும் உரிமைகளையும் ஈடுபாடுகளையும் மதிக்கவேண்டும் என்பதை இலங்கையின் உறுதியான எதிர்காலம் வேண்டி நிற்கிறது.

விசாலமான, கல்விமேம்பாடுள்ள மற்றும் பாரிய வழங்களைக்கொண்ட புலம்பெயர்ந்தோர் சமூகம், இலங்கையின் எதிர்காலத்தில் இதைவிட மிக ஆக்கபூர்வமானதொரு பாத்திரத்தை வகிப்பதற்கான நிலைச்சக்தியை கொண்டுள்ளது.

ஐ.நா. அமைப்புக்களும் பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறியுள்ளன.

**தீர்மானங்கள்**

**1. குற்றச்சாட்டுக்களின் சுபாவம் மற்றும் நோக்கெல்லை**



யுத்தத்தின்போது காணாமற்போனவர்களின் உறவினர்கள்

421. இங்கையின் யுத்தத்தின் இருதரப்பினரும் பொதுமக்களின் பாதுகாப்பு, உரிமைகள், நலன் மற்றும் உயிர்கள் பற்றிய எவ்வித அக்கறையுமின்றி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட தோடு, சர்வதேச சட்டத்தின் விதிகளையும் அணுகத்தவறினர். இரு தரப்பினரும் பாரிய அளவில் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்ட மீறல்களில் ஈடுபட்டதை நம்புவதற்கான நியாயமான அடிப்படை உள்ளது. இதன் நேரடி விளைவாக, பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் இலங்கையில் கொல்லப்பட்டதோடு, உறவினர்களின் இழப்பு,பாரிய காயங்கள், இடப்பெயர்வு மற்றும் வீடுகளையும் வாழ்வாதாரங்களையும் இழத்தல் ஆகியவற்றை உள்ளிட்டவாறு மேலும் பல்லாயிரக்கணக்கானோர் பாரிய துன்பங்களுக்கு உள்ளாகினர். யுத்தத்தைத்தொடர்ந்து பலர் மேலும் கஷ்டங்களையும் அவமதிப்பையும் அனுபவிக்கநேர்ந்தது.

422.இலங்கை அரசாங்கத்தின் நடத்தை பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதஉரிமைகள் சட்டத்தின் நிலைதகவுள்ள பாரிய மீறல்களைக் கொண்ட ஐந்து முக்கிய வகுதிகளுக்குள் அடங்குகின்றன:

(டி)வகைதொகையின்றி செல் தாக்குதல் மூலம் பொதுமக்களை கொலை செய்தல்

(டிடி) ஆஸ்பத்திரிகள் மற்றும் மனிதாபிமான இடங்களை செல்வெடியினால் தாக்குதல்

(டிடிடி) மனிதாபிமான உதவியை வழங்கமறுத்தல்

(டிதி) உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரை மற்றும் சந்தேகிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களை உள்ளிட்ட பாதிக்கப்பட்டோர் மற்றும் யுத்தத்தில் உயிர் பிழைத்தவர்களின் மனித உரிமைகள் மீறல்கள்

(தி) ஊடகங்கள்மற்றும் ஏனைய அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு எதிரானவற்றை உள்ளிட்ட யுத்த வலயத்துக்கு வெளியே மனித உரிமைகள் மீறல்கள்

யுத்தத்தின் இறுதிக்கட்டத்துடன் தொடர்புபட்ட எல்.ரி.ரி.ஈ. இன் நடத்தைபற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் நிலைத்தகவுள்ள ஐந்து முக்கிய மீறல்கள் வகுதிகளை உள்ளடக்குகின்றன.

(டி) தாக்குதலைத் தடுப்பதற்காகப் பொதுமக்களைக் கேடயமாக பாவித்தல்

(டிடி) எல்.ரி.ரி.ஈ. இன் கட்டுப்பாட்டில் இருந்து தப்பிஓட முனைந்தவர்களை கொலைசெய்தல்

(டிடிடி) பொதுமக்களுக்கு அருகே இருந்து ராணுவத் தளபாடங்களை பிரயோகித்தல்

(டிதி) வலுக்கட்டாயமாக சிறுவர்களை அணிதிரட்டல்

(தி) தற்கொலைக் குண்டத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைப் படுகொலை செய்தல்.

423. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் என்ன நேர்ந்தது என்ற குழுவின் மதிப்பீடு மற்றும் அதனைத் தொடரும் அரசியல், சட்டமற்றும் நல்லொழுக்கக் கட்டுப்பாடுகள், தான் "பூஜ்யப்பொதுமக்கள்" சேதம் என்ற கொள்கையுடன் "மனிதாபிமான மீட்புநடவடிக்கை" ஒன்றை மேற்கொண்டதாகவும் அதனால் எந்தத் தவறுக்கும் அது பொறுப்பில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு அது முற்றிலும் மாறுபட்டதாகவுள்ளது.

**உ.குற்றச்சாட்டுக்கள் சட்ட மதிப்பீடு**


424.நிரூபிக்கப்பட்டால், இரு தரப்பினதும் இந்த நம்பகமான குற்றச்சாட்டுக்கள், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் பாரிய மீறல்களாக

**தமிழாக்கம் தொடர் 52**

அமையும். அவற்றள் பல போர்க்குற்றங்களாகவும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களாகவும் இருக்கும் செயல்களில் ஈடுபடும் தனிநபர்கள் மற்றும் இராணுவக் கட்டளைத்தளபதிகள் அத்துடன் சிவிலியன் மேற்பார்வையாளர்கள் ஆகிய இருசாராரையும் குற்றத்துக்கான பொறுப்பு மேவும். நம்பகமான குற்றச்சாட்டுக்கள் இலங்கையின் சட்டத்தின் கீழான பல குற்றங்களையும் கொண்டுள்ளன.

*(தொடரும்)*

# ஆனி மாத இராசி பலன்கள்



## இடபம்

**(கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 பாதங்கள் வரை)**

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும் ரிஷப இராசி நேயர்களே!

அன்புக்கு அடிபணியும் உங்களுக்கு நண்பர்கள் பட்டாளம் ஏராளமாக இருக்கும். எல்லோர் மனதிலும் இடம் பிடித்தவர்கள் நீங்கள் என்றாலும் , உங்கள் மனதில் இடம் பிடித்தவர்கள் ஒருசிலர் மட்டுமே. உங்களிடம் ஒப்படைத்த பொறுப்புக்களை ஒவ்வொருவரும் பாராட்டும் விதத்தில் செய்யும் அற்புத திறமை உங்களுக்குள் ஒளிந்திருக்கிறது.

இறை நம்பிக்கை அதிகமுள்ளவர்களாக இருப்பர்.

உங்களுக்கு இந்த ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சுக்கிரன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதோடு, தனாதிபதி புதனும் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால், ஆரோக்கியம் திருப்தி தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ள ஒவ்வொரு காரியங்களாக செய்து முடிப்பீர்கள். கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த மந்தநிலை மாறி, பொருளாதார நிலையை உயர்த்தும்.

புத-ஆதித்ய யோகமும், சூரிய-சந்திரப் பார்வையும் இணைந்து மாதம் தொடங்குவதால், செல்லும் இடங்களில் எல்லாம் செல்வாக்கு அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

சகோதர வழியில் இருந்த பிரச்சினைகள் தீரும். ஜென்ம கேது அலைச்சலை அதிகம் கொடுக்கலாம். ஒன்று உங்கள் வேலையை முடிக்க அலைச்சல்கள் ஏற்படும். அல்லது மற்றவர்களின் வேலையை முடிப்பதற்காக நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியில் அலைச்சல் ஏற்படும். அதேநேரம் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு.

“யோககாரகன்” சனி வக்ர நிவர்த்தியானதால், இனி எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. முன்னோர்வழி சொத்துக்களில் முறையான இலாபம் கிடைப்பதோடு, அதை விற்று, புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொள்வீர்கள்.

உங்கள் இராசிக்கு 2, 5-க்கு அதிபதியான புதன் ஜூன் 26 ஆம் திகதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, தன வரவு தாராளமாக வந்து சேரும், இனத்தார் பகை மாறும். எடுத்த காரியத்தை முடித்துக் கொடுக்க நண்பர்கள் முன்வருவர்.

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்கள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். அவர்கள் விரும்பும் படிப்பில் சேர்த்து விடக் கூடிய வாய்ப்புக் கிட்டும். அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புக் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள்.

ஜூன் 30 ஆம் திகதி மிதுன இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் 2இல் சஞ்சரிக்கும் பொழுது,கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். எப்பொழுதோ கொடுத்த கடன் வசூலாகும்.

குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச் சினைகள் அகலும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். என்னயிருந்தாலும், மாதக் கடைசியில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. தொழிலில், வேலையில் பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள், மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

ஜென்ம கேதுவால் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்கவும், சப்தம இராகுவால் சஞ்சலங்கள் உருவாகாமல் இருக்கவும் சர்ப்ப கிரகங்களை முறையாக வழிபாடு செய்வது நல்லது. நாகதோஷ நிவர்த்தி செய்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் மாதமாக இந்த மாதம் அமையும். இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் சொற்கேட்டு நடக்க முன்வருவர். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாவதில் சில தடைகள் ஏற்பட்டு அகலும்.

இராகு-கேதுக்களின் ஆதிக்கம் அதிகமிருப்பதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. கணவன்-மனைவி உறவில் கனிவு ஏற்பட விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். குலதெய்வ வழிபாடும், வடக்கு நோக்கிய விநாயகர் வழிபாடும் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும்.

**சிவல்புரி சிங்காரம்**

(தொடரும்)

# வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு இராணுவத்தால் வீட்டுத் தோட்டம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தால் வறுமைக்கோட்டின் கீழு ள்ள விவசாய குடும்பங்களுக்கு வீட்டுத் தோட் டம் அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ். கட்டளைத் தளபதி மேஜர்.ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவின் பணிப்புரைக்கமையவே இந்த வீட்டுத்தோட்டம் அமைக் கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 250 விவசாய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது காணியில் இராணுவத்தின் நிதியுதவியுடன் இந்த வீட்டுத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 10 ஆயிரம் ரூபா செலவில் இத்தோட்டம் அமைக் கப்பட்டு வருகிறது.

இதில் பலவகை மரக்கறி செய்கைகளும் பலன் தரு மரங்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. (ஸ்ரீ-6)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆராதனை மண்டபத்தில் அதிபர் சே.சேதுராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இப் பாடசாலையின் 11 ஆம் ஆண்டு நிறைவு விழா பற்றிய ஆலோசனைகள் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

(ஸ்ரீ-10)

# கஞ்சாவை நூதன முறையில் கடத்திவர முற்பட்ட நபர் கைது

(கொழும்பு)

நூதனமான முறையில் கஞ்சாவை உடம்பில் கட்டிக் கொண்டு அம்பாறையிலிருந்து கொழும்புக்குக் கடத்திவர முற்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கடத்தப்பட்ட இரண்டு கிலோவும் எண்ணூறு கிராம் எடை கொண்ட கஞ்சாவும் அம்பாறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் கைப்பற்றப்பட்டுள்ளது.


போதைப்பொருள் தடுப்பு பிரிவின் புலனாய்வாளர்களிடமிருந்து அம்பாறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றையடுத்தே பிரஸ்தாப நபர் உடம்பில் மறைத்து வைக்கப்பட்ட கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.


அவரது உடலின் வயிற்றுப் பகுதியில் ஒன்றரைக் கிலோ சுமாரான கஞ்சாவும் ஏனைய பகுதிகளில் எஞ்சிய கஞ்சாவும் பொதிசெய்யப்பட்ட நிலையில் சூட்சுமமாக உடம்புடன் சேர்த்து கட்டப்பட்டிருந்ததை சந்தேக நபரை சோதனையிட்ட பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

கொழும்பில் விற்பனை செய்வதற்காவே கஞ்சாவை கடத்திச் செல்ல முற்பட்டதாக அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. தற்போது சந்தேக நபருக்கு நீதிமன்றத்தின் ஊடாக விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



கிளிநொச்சி மாவட்டத்தில் வடமாகாண சபையின் கேட்போர்கூடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், பிரதிப் பிரதம செயலாளர் இராசநாயகம் ஆகியோர் இணைந்து நாடா வெட்டி திறந்து வைப்பதையும் ஆளுநர் தலைமையில் அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)





கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டு விழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதேச செயலர் ம.பிரதீபன், விளையாட்டதிகாரி செல்வி அகல்யா ஆகியோர் வெற்றி பெற்ற வீரருக்கு வெற்றிகேடயம் வழங்குவதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட என்றிப் திட்டப் பணிப்பாளர் குகதாசன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## உலகில் தோல்வியடைந்த நாடுகளில் இலங்கை 29 ஆவது இடத்திலுள்ளது

உலகில் மிகவும் தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 29 ஆவது இடத்திலுள்ளதாக அமெரிக்காவிலிருந்து வெளியிடப்படும் *வெளிவிவகாரக் கொள்கை* எனும் சஞ்சிகையினால் தோல்வியடைந்த நாடுகளின் சுட்டெண் 2011 எனும் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் சோமாலியா முதலிடத்திலும் சாட் எனும் நாடு இரண்டாவது இடத்திலும் சூடான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

உலகில் மிகவும் தோல்வியடைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையின் அயல்நாடான பாகிஸ்தான் முன்னிலை வகிக்கிறது. இப்பட்டியலில் பாகிஸ்தான் 12 ஆவது இடத்திலும் மியன்மார் 18 ஆவது இடத்திலும் பங்களாதேஷ் 25 ஆவது இடத்திலும் நேபாளம் 27 ஆவது இடத்திலும் உள்ளன.

60 நாடுகளைக் கொண்ட இப்பட்டியலில் பூட்டான் 50ஆவது இடத்திலுள்ளது.

இப்பட்டியலில் உள்ள நாடுகளில் பெரும்பாலானவை ஆபிரிக்க நாடுகளாகும்.

வெளிவிவகாரக் கொள்கை எனும் சஞ்சிகையினால் வெளியிடப்பட்ட தோல்வியடைந்த நாடுகளின் சுட்டெண் 2011 எனும் பட்டியலில் இலங்கை தொடர்பாகக் குறிப்பிடப்படும் போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கையின் போது இலங்கை படைத்தரப்பினரால் பொதுமக்கள் மீது எறிகணைத் தாக்குதல்களும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இடம்பெயர்ந்த 3 இலட்சத்து 27 ஆயிரம் பேரில் சிலர் இதுவரை மீளக்குடியேற்றப்படவில்லை எனவும் இலங்கையில் குறிப்பிடத்தக்க பிளவுகள் இன்னும் நிலவுவதாகவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## வவுனியா நகர சபைக்குட்பட்ட பல வீதிகள் புனரமைப்பு

(கொழும்பு)

வவுனியா நகர சபைக்குட்பட்ட பல வீதிகள் வவுனியா நகர சபையின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருவதாக வவுனியா நகர சபையின் பதில் தலைவர் எம். எம். றதன் தெரிவித்துள்ளார்.

இதில் பண்டாரிக்குளம் பிரதான வீதி,பூந்தோட்டம் பிரதான வீதி, கந்தசாமி கோவில் வீதி, திருநாவுக்குள வீதி ஆகியவையே புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக இவ் வீதிகள் கடுமையாக சேதமடைந்திருந்ததனால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டு வவுனியா நகர சபையினரின் நிதியுதவியுடன் இப்புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்துகிறது

(கொழும்பு)

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் சனல்4 ஒளிபரப்பிய ஆவணப்படம் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே இராஜாங்கத் திணைக்களப் பெண் பேச்சாளர் விக்டோரியா நுலன்ட் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மினத உரிமைச் சட்ட மீறல்கள் தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டமீறல்கள் குறித்து முழுமையான விசாரணைகள் நடத்தப்படுவதற்கு அமெரிக்கா ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ளது என்றார். (ந)

## 2011.06 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1532-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியும் பிரான்சின் முதலாம் பிரான்சுவாவும் புனித ரோமப் பேரரசின் ஐந்தாம் சார்ள்சுக்கு எதிராக இரகசிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினர்.

★ 1565-மால்ட்டா மீதான முற்றுகையின் போது ஒட்டோமான் பேரரசின் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டான்.

★ 1658-இலங்கையில் போர்த்துக்கேயரின் கடைசிப் பிடியாக இருந்த யாழ்ப்பாணக் கோட்டையை டச்சுக்காரர் கைப்பற்றினர்.

★ 1757-இந்தியாவில் பலாசி என்ற இடத்தில் வங்காளத்தின் கடைசி நவாப் சிராஜ் உல் டாவுலா தலைமையிலான இந்திய இராணுவத்தினரை பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் தோற்கடித்தனர்.

★ 1758-ஏழாண்டுகள் போர்: பிரித்தானியப் படைகள் ஜேர்மனியில் கிரெஃபீல்ட் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகளை வென்றனர்.

★ 1760-ஏழாண்டுகள் போர்: ஆஸ்திரியா புரூசியாவை வென்றனர்.

★ 1794-உக்ரேனின் கீவ் நகரில் யூதக் குடியேற்றத்துக்கு ரஷ்யாவின் பேரரசி இரண்டாம் கத்தரீன் அனுமதி அளித்தாள்.

★ 1868-கிறிஸ்தோபர் ஷோல்ஸ் தட்டச்சி யந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1894-சர்வதேச ஒலிம்பிக் அமைப்பு பாரிசில் அமைக்கப்பட்டது.

★ 1919-எஸ்தோனியாவின் விடுதலைப் போரில் வடக்கு லாத்வியாவில் செசிஸ் என்ற இடத்தில் ஜேர்மனியக் படைகள் தோற்ற இந்நாள் எஸ்தோனிய வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: முதன் முதலாக அவுஷ்விட்ஸ் வதை முகாமில் நச்சுவாயு அறையில் சேர்ப்பதற்காக முதல் தொகுதி யூதர்கள் பாரிசில் இருந்து புகையிரதத்தில் அனுப்பப்பட்டனர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் போர் விமானம் ஒன்று தவறுதலாக வேல்சில் தரையிறங்கியபோது கைப்பற்றப்பட்டது.

★ 1945-ஜப்பானிய இராணுவத்துக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற ஒகினவா சண்டை அமெரிக்காவின் வெற்றியுடன் முடிவடைந்தது.

★ 1956-கமால் நாசர் எகிப்தின் ஜனாதிபதியானார்.

★ 1960-பத்திரிசு லூமும்பா கொங்கோ குடியரசின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் ஆனார்.

★ 1968-புவெனஸ் அயரசில் உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 74 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1980-இந்திய அரசியல்வாதி சஞ்சய் காந்தி விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

★ 1985-அயர்லாந்தில் அட்லாண்டிக் கடலின் மேல் 9500 மீற்றர் உயரத்தில் பறந்து கொண்டிருந்த இந்தியாவின் போயிங் விமானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அதில் பயணம் செய்த 329 பேரும் கொல்லப்பட்டனர்.

★ 1990-மல்தாவியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலையை அறிவித்தது.

### பிறப்புக்கள்

★ 1924-ரணசிங்க பிரேமதாசா, இலங்கை ஜனாதிபதி (இ.1993)

★ 1972-ஜினடைன் ஜிடான், பிரெஞ் காற்பந்தாட்டக்காரர்

### இறப்புக்கள்

★ 1980-வி.வி.கிரி, இந்தியாவின் 4 ஆவது ஜனாதிபதி (பி. 1894)

★ 1980-சஞ்சய்காந்தி, இந்திய அரசியல்வாதி (பி.1946)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

**ஆன்மீகம் 30**

## நீங்கள் ஆனந்தமாக இருந்தால்...

"தனக்காக வாழ்பவன் கெட்டவன், பிறருக்காக வாழ்பவனே நல்லவன் என்று ஒரு புத்தகத்தில் படித்தேன். கடவுள் என்னிடம் அதைத்தான் எதிர்பார்க்கிறாரா?"

நல்லது, கெட்டது என்பதெல்லாம் எங்கள் கண்ணோட்டம்தான். ஒன்றைக் குற்றம் என்றும் ஒன்றை நல்லது என்றும் நினைக்கும்போதே மனம் சிதைந்துவிடுகிறது. கடவுளைக் கொண்டுவந்து அதில் சேர்க்காதீர்கள்.

கடவுள் நல்லவரா கெட்டவரா? இரண்டும் இல்லை. அவர் ஆனந்தமானவர். அவ்வளவுதான்!

டாக்டரிடம் போகிறீர்கள். அவர் உங்கள் உடம்பைப் பரிசோதித்து முடிவுகள் சொல்வார் என்று காத்திருக்கும்போது, அவர் கண்களை மூடி கடவுளிடம் பிரார்த்திக்கத் தொடங்கினால் எப்படி உணர்வீர்கள்?

நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்யாமல் கடவுளைப் பற்றிக்கவலைப்படுவது அப்படித்தான் இருக்கிறது.

நல்லவனாக இருப்பதாகச் சொல்லிக் கொள்வதேகூட ஒருவித நோய்தான்!

வீட்டுக்குத் தாமதமாகித் திரும்பிய சங்கரன்பிள்ளையிடம் "ஏன் இவ்வளவு லேட்" என்று கேட்டாள் மனைவி.

"அலுவலகத்தில் தாமதமாகிவிட்டது!"

"விசாரித்தேன். நீங்கள் அலுவலகத்திலிருந்து ஐந்து மணிக்கே புறப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள்!" மறுநாளும் அதே தாமதம். அதே கேள்வி.அதே பதில். அதே எச்சரிக்கை மூன்றாவது நாள் அவர் மனைவி பொறுமையிழந்து, "நாளைக்குப் பொய் சொன்னால் நாக்கில் சூடு வைப்பேன்" என்றாள்.

அதற்கடுத்த நாள் சங்கரன்பிள்ளை வீட்டுக்குத் திரும்யதும் "அடுப்பு எரிகிறதா?" என்று கேட்டார்.

"இல்லையே...ஏன்?"

"அப்படியானால் இன்றைக்கும் அலுவலகத்தில் லேட்டாகி விட்டது!" என்றார் சங்கரன்பிள்ளை.

இப்படித்தான், தனக்கு ஆபத்து இல்லாதவரைதான் நல்லவன் நல்லவனாக நடந்துகொள்வான்.

நல்லவர்களுக்கு கெட்டது எதுவும் தெரியாது என்று நினைக்கிறீர்களா? அவர்கள் கெட்டது என்று நினைப்பவற்றை தவிர்க்க முயல்கிறார்கள்; அவ்வளவுதான்! ஒன்றைத் தவிர்க்க முயலும்போது அதுபற்றிய கவனம் தான் அதிகமாகும் ஒன்றின் மீது கவனம் அதிகமாகும்போது அதிலிருந்து விடுபடவில்லை என்று தானே அர்த்தம்?

"நான் தேடிப்போய் யாருக்கும் உதவி செய்யமாட்டேன். அதே சமயம் மனதாலும் பிறருக்கு எந்தக் கெடுதலும் நினைக்க மாட்டேன். நான் நல்லவனா கெட்டவனா?"

மூன்றுவித நிலைகளில் இயங்கும் மனிதர்கள் இருக்கிறார்கள்.

தன்னைப் பற்றிய பொறுப்பைக்கூட ஏற்றுக்கொள்ளாமல், யார்கையிலாவது தன்னை ஒப்படைக்க காத்திருப்பவர்கள் ஒருவகை. அவர்கள் புழுவைவிடக் கேவலமானவர்கள்.

மற்றவர்களைப் பற்றிக் கவலையின்றி, தன்னைமட்டும் பார்த்துக்கொள்பவன் அடுத்தவன். இவன் மிருகத்தைப் போன்றவன். மிருகங்கள் பொதுவாக யாருக்கும் தீங்கு நினைப்பதில்லை. சிங்கம் பசித்திருக்கும்போது எதிரே போனால் அது உங்களை உணவாகப் பார்க்கிறது. மற்றப்படி, அது உங்களை எதிரியாகப் பார்த்து அடித்துப் போடவில்லை.

தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஒரு தேவை என்றால் தாமாகவே அவர்களை அண்டி உதவி செய்பவர்கள் மூன்றாவது வகை இவர்கள்தான் மனிதன் என்ற பதத்துக்கு அருகதை உள்ளவர்கள்.

மற்றப்படி யாரோ சொன்னதற்காக மற்றவருக்கு உதவுகிறவர்கள் இதில் சேர்த்தி இல்லை.

சங்கரன்பிள்ளைக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, ஒருபுதிய அறை ஒதுக்கப்பட்டது. தனக்குக் கீழே பணிபுரிபவர்களுக்கு எதிரில் தன்னைப் பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள விரும்பினார் அவர்.

அறைக்கதவு தட்டப்பட்டபோது டக் கென்று தொலைபேசி ரிசீவரை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டார் கம்பனி முதலாளியிடம் உரிமையோடு பேசுவது போல் பாவனை செய்தார். பிறகுதான் உள்ளே வந்தவனைக் கவனித்துத்ததாகக் காட்டிக்கொண்டு "சொல் தம்பி உனக்கு என்ன வேண்டும்?" என்றார்.

அவன் நமுட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டுச்சொன்னான்... "ஐயா, தங்கள் அறையில் உள்ள தொலைபேசிக்கு கனெக்சன் கொடுக்க வந்திருக்கிறேன்!"

மற்றவர்களிடத்தில் செயற்கையாகத் தன்பிம்பத்தை உயர்த்திக் காட்டுவதற்காக முனைபவர்கள் இப்படித்தான் மூக்கு உடைக்கப்படுவார்கள். அவர்கள் போலிகள்!

உங்களிடம் மனிதகுணம் முழுவீச்சில் இயல்பாகவே இயங்கினால், எந்தக்கோட்பாடுக்காகவும் காத்திருக்க மாட்டீர்கள். உங்கள் சக்திக்கு உட்பட்டு, இயல்பாகவே அடுத்தவருக்குத் தேவையானதை கவனித்து வழங்குவீர்கள். எங்கெங்கு தேவையோ, அங்கெல்லாம் உங்கள் கரங்கள் தாமாகவே உதவியுடன் நீளும்!

"என்னால் எப்படி எல்லோருக்கும் உதவிசெய்துகொண்டிருக்க முடியும்?"

உங்களால் முடியாததை நீங்கள் செய்யாவிட்டால், அது தவறேயில்லை. செய்யக்கூடியதை செய்யாமல் விட்டால்தான், நீங்கள் மனிதராக இருக்கவே தகுதியற்றவர் ஆகிவிடுவீர்கள்.

மனிதன் எட்டக்கூடிய உயரங்களை எட்டாமலேயே இருப்பது எவ்வளவு பரிதாபமான நிலை? கடவுளை விடுங்கள்; அடுத்தவரை விடுங்கள். உங்களைப்பற்றிக் கவனங்கொள்ளுங்கள். நீங்கள் ஆனந்தமாக இருந்தால், உங்களைச் சுற்றியுள்ள வர்களின் வாழ்க்கையும் ஆனந்தமாக இருக்கும்.

மனிதர்கள் மேம்பட்டால்தான் மனிதத்தன்மை மேம்படும். மனிதத்தன்மை மேம்பட்டால், யாரும் யாருக்கும் எந்தப்போதனையும் செய்யத் தேவையிருக்காது. அதனால்தான் யோகாவில் கடவுளைப்பற்றிக் கவனிப்பதில்லை. மனிதர்களைப் பற்றியே கவனம் கொள்கிறோம்.

அமுதம் தயார்! அள்ளி அருந்துவது உங்கள் கைகளில்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# புலம்பெயர் தமிழரின் பண்பாட்டு அசைவியக்கத்தில் கனேடிய இலக்கிய இதழ்களின் பங்கு 02

**க.நவம்-கனடா**

**புலம்பெயர் இலக்கியமும் ....**

பண்பாடு என்ற பதத்திற்கு பல அர்த்தங்கள் இருப்பதனாலும், அதன் காரணிகள் தொடர்ந்து மாற்றமடைந்து வருவதினாலும் அதற்கென ஒரு நிலையான வரைவிலக்கணத்தை வகுப்பதில் சிரமங்கள் உள. ஆயினும் "மனிதன் ஒருவன், தான் வாழும் சமூகத்தின் ஓர் உறுப்பினன் என்ற வகையில், அவன் பெற்றுக் கொண்ட அறிவு, நம்பிக்கை, சட்டம், அறம், கலைஇலக்கியங்கள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள், சாதுரியங்கள் போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு சிக்கலான ஒட்டுமொத்த சமூகத் தனிமமே பண்பாடு" என ஆங்கில மானிடவியலாளர் Edward B.Taylor கூறிவைத்துள்ள வரைவிலக்ணத்தை பொருத்தப்பாடு கருதிக் கவனத்திற் கொள்வோம்.

அறிவின் முழுப்பரிமாணத்தையும் குறிக்கும் இப்பண்பாடு ஒரு சமூகத்தின் இருப்புக்கு அவசியமானது. இப்பண்பாட்டின் தெரிவுகளும் பாரம்பரியங்களுமான மொழி, மதம், பழக்கவழக்கங்கள், வரலாறு, கூட்டு நினைவுகள், விழுமியங்கள், பொது வெளி, குறிப்பிட்ட நிலப்பரப்பு என்பனவே மக்கள் குழுக்களை அடையாளப்படுத்தி வரையறை செய்து வைத்திருக்கின்றன. அதேமக்கள் குழுக்களை பிணைத்தும் வைத்திருக்கின்றன. "நகரத்தோடு ஒட்டியதாகவும், புதியசமுதாயத்தோடு இயைந்து போகவல்லதாகவும் அமையும் பண்புதான்- வள்ளுவர்கூறிவைத்த - "நயத்தக்க நாகரிகம்"எனக் குறிப்பிடலாம் என்றால்- எமக்கே உரியதும், எம்மைவிட்டு விலகமறுப்பதுமான குணாம்சங்களையே பண்பாடு" என

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

மிக எளிமையாக இன்னொரு வகையில் கூறலாம். இத்தகைய பண்பாட்டின் அசைவியக்கத்தில் இலக்கிய இதழ்களின் பங்கு என்ன என்பதை கண்டறிந்து கொள்வதற்கு கனேடிய தமிழ் இதழ்களின் விபரத்தெளிவு பெரும் அளவில் பயன்தரும்.

**வரலாறும் வகைதொகையும்**

1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மொன்றியால் நகரில் முதன்முறையாக வெளியிடப்பட்ட தமிழ்எழில் என்ற கையெழுத்துச் சஞ்சிகையுடன், கனேடிய தமிழ்ச்சஞ்சிகையின் வரலாறு ஆரம்பமாகிறது. பின்னர் அதே ஆண்டு மார்கழி மாதம் தட்டச்சில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இதழாக அது உருமாறுகின்றது.

இதனைத்தொடர்ந்து முதன் முதலாக கணினியில் தமிழ் எழுத்துருவைப்பயன்படுத்தி, ரொறொன்ரோவில் வெளிவந்த நிழல் என்னும் சஞ்சிகை கனேடிய தமிழ் இலக்கியத் துறையில் ஒரு மைல்கல்லாக இடம் பெறுகின்றது. மின்னிதழ்களைத் தவிர்த்து, இதுவரை முப்பத்தெட்டு தமழ்ச்சஞ்சிகைகள் கனடாவில் வெளிவந்துள்ளன. இந்தக்குறுகிய கால எல்லைக்குள் இவ்வளவு தொகைலான சஞ்சிகைகள் தோன்றுவதற்கான காரணம் என்ன? அதற்கான தேவைதான் என்ன?

கனடாவில் சிறுபான்மை இனத்தவர்களது நலன்களைப்பேணுவதில் ஆர்வம் காண்பித்த முன்னாள் பிரதமர் பியர்ட்ருடே அறிமுகப்படுத்திய பல கலாசாரக்கொள்கை காரணமாக இலங்கைத்தமிழரும் தமது மொழி, மதம், கலைபண்பாடு போன்றவற்றை பேணும் உரிமையை பெற்றுக்கொண்டனர். இவ்வாறான உரிமைகளும் வாய்ப்புக்களும் கிடைக்கப்பெற்ற ஈழத்தமிழருள் பெரும்பாலானோர் எண்பதுகளின் நடுப்பகுதிக்கு பின்னர் கனடா வந்துசேர்ந்தவர்கள். இவர்களுள் அனேகர் தமிழ் மொழியை மட்டுமே தெரிந்திருந்தவர்கள். இதனால் நமக்கே உரிய பண்பாட்டுத் தன்மைகளுடன் கூடிய அடையாளத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கான தேவை இவர்களுக்கு இருந்தது. அதற்கென கிடைத்த சுதந்திரத்தை பயன்படுத்தியாகவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது. அதற்கான சந்தர்ப்பமும் இவர்களுக்குக் கிடைக்கப்பெற்றிருந்தது. தமிழ் மொழியில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடும் வாய்ப்பும் இவற்றுள் ஒன்றாகும். இதுவே கனடாவில் பெருந்தொகையான சஞ்சிகைகள் தோன்றியமைக்கான பின்னணியாகும்.

(தொடரும்)

# மாணவர் விசாவில் பிரிட்டன் செல்வோர் 5 வருடங்கள் மட்டுமே தங்கியிருக்க முடியும்

## பிரத்தானிய உயர்ஸ்தானிகராலயம் அதிரடி அறிவிப்பு

பிரித்தானிய அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசா முறைமையின் கீழ் மாணவர்களாக வருபவர்கள் 5 வருடங்களுக்கு மேல் பிரித்தானியாவில் தங்கியிருக்க முடியாது என கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இவர்கள் கற்கைநெறியினை முடிக்காவிட்டாலும் 5 வருடங்களின் பின்னர் கட்டாயம் திரும்பி அனுப்பப்படுவர். திருப்பி அனுப்பப்படுபவர்கள் நாடு திரும்பிய பின்னர் மீண்டும் விசாவுக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

எனினும் மாணவர் விசாவின் கீழ் வருகை தந்து கலாநிதி கற்கை நெறியை மேற்கொள்பவர்களுக்கு மாத்திரம் 5 வருடங்கள் பின்னரும் மாணவர் விசா நீடிக்கப்படும் என கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டது.

பிரித்தானிய அரசாங்கத்தினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசா முறைமை தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

இதில் இலங்கைக்கான பிரித்தானிய பிரதி உயர் ஸ்தானிகர் மார் கூடிங் மற்றும் பிரித்தானிய எல்லை முகவராலயத்தின் பிராந்திய பணிப்பாளர் கிரிஸ் டிக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு கருத்து தெரிவித்த கிரிஸ் டிக்ஸ்,

அரச பல்கலைக்கழகங்களில் கற்கை நெறியினை மேற்கொள்ளும் வெளிநாட்டு மாணவர்கள் மாத்திரமே தொழில் நடவடிக்கையில் ஈடுபடமுடியும். இதற்கிணங்க பிரித்தானியாவிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்கள் தொழிலில் ஈடுபட முடியாது எனும் கண்டிப்பான விதி புதிய விசா முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர் விசாவின் கீழ் வருபவர்கள் தங்களது கற்கைநெறியை நிறைவு செய்த பின்னர் பிரித்தானிய கம்பனியில் தொழில் வாய்ப்பினைப் பெறுவார்களாயின் அவர்களுக்கு வதிவிட விசா வழங்கப்படும்.

தகுதியானவர்களை நாட்டுக்குள் எடுத்து பிரித்தானிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பவே புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசா முறைமை இறுக்கமாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தகுதியானவர்கள் நாட்டுக்குள் நுழைவர்.

சட்டவிரோதமான முறையில் பிரித்தானியாவிற்குள் நுழைவதை தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன் ஒரு கட்டமாகவே அண்மையில் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 28 இலங்கையர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த வருடமும் பிரித்தானியாவிற்கு சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட வெளிநாட்டவர்கள் பலர் நாடு திருப்பப்பட்டனர். இவர்களில் பலர் அகதி அந்தஸ்து கோரியவர்களே யாவர்.

இதில் இலங்கையர்கள் மாத்திரமல்ல பல நாட்டை சேர்ந்தவர்கள் இருந்தனர். தற்போது பிரித்தானியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் அனைவரும் விரைவில் திருப்பி அனுப்பப்படுவர்.

இதேவேளை, இலங்கையிலிருந்து சிறந்த வர்த்தகர்களையும் பிரித்தானியாவிற்கு எடுக்கும் முகமாக துரித வியாபார சேவை எனும் விசா முறைமை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் ஊடாக அதிக வர்த்தகர்கள் பிரித்தானியாவுக்கு இலகுவாக செல்லமுடியும். 2010ஆம் ஆண்டு பிரித்தானியாவிற்கு மாணவர் விசாவிற்கு விண்ணப்பித்தவர்க ளில் 70 சதவீதமானவர்கள் விசா பெற்றனர். சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங் கையர்கள் பிரித்தானியாவுக்கு விஜயம் செய்தனர்.

ஒவ்வொரு மாதமும் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்திற்கு சுமார் 200 போலி விசா விண்ணப்பங்கள் கிடைக்கின்றன. இந்த புதிய திட்டத்தின் கீழ் போலி விசா விண்ணப்பங்களையும் இல்லாமல் செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# விலங்குவிசர் நோய் தடுப்பூசியேற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட யாழ். நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை கன்னாதிட்டி காளி கோவிலடியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நியோன் உணவகம், கே.கே.எஸ். வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 11 மணி வரை நாவலர் வீதி சிகிச்சை நிலையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கஸ்தூரியார் வீதி, றொலக்ஸ் பேக்கரியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# விசாகாலம் முடிந்தும் பிரிட்டனில் தங்கியிருந்த இலங்கை மாணவர்கள் நாடுகடத்தப்படவுள்ளனர்

(கொழும்பு)

அதிகளவான இலங்கை மாணவர்கள் பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்படவுள்ளதாக பிரித்தானிய எல்லை முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

விசா காலம் முடிபடைந்ததன் பின்னர், தொடர்ந்தும் பிரித்தானியாவில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த பலர் மாணவர் விசாக்களில் பிரித்தானியா சென்று விசா காலம் முடிபடைந்ததன் பின்னரும் தங்கியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

விசா காலாவதியானதன் பின்னர் தங்கியிருந்த 555 இலங்கை மாணவர்கள் கடந்த வருடம் நாடு திரும்பியதாக தென் ஆசியாவிற்கான பிரித்தானிய எல்லை முகவர் நிறுவனத்தின் பிராந்தியப் பணிப்பாளர் கிறிஸ் டிக்ஸ் தெரிவித்துள்ளார்.

குடிவரவு மூலம் பிரித்தானியா நன்மை அடைகின்ற போதிலும் கட்டுப்பாடுகளுடன் குடியேற்றக்காரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி பிரித்தானியாவிற்குள் பிரவேசிக்க முயற்சி செய்யும் நபர்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு செய்யப்பட்ட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கூடுதலான அளவு மோசடிகள் இடம்பெறுவதாகவும் மோசடிகளில் ஈடுபடுவோருக்கு உச்ச பட்சமாக இரண்டு ஆண்டுகால பயணத்தடை விதிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு உரிய முறையில் பதிலளிக்கப்பட வேண்டும்

## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு உரிய முறையில் பதிலளிக்கப்பட வேண்டுமென சபாநாயர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் மற்றும் அமைச்சு செயலாளர்கள் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்ட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமது சில கேள்விகளுக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் பதிலளிக்கத் தவறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியதனைத் தொடர்ந்து சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் எந்தெந்த நாடுகளிடம் எந்தெந்த வங்கிகளிடம் எவ்வளவு வட்டிக்கு எவ்வளவு தொகையை கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளது என ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்குமாறு பிரதிநிதி அமைச்சர் கீதாஞ்சன குணவர்தன தெரிவித்திருந்தார்.

இந்தக் கேள்வியை நான்காவது தடவையாக கேட்பதாகவும், ஆளும் கட்சியினர் தொடர்ச்சியாக கால அவகாசம் கோரி வருவதாகவும் ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிபுணர்களுக்கு விசேட பயிற்சியளிப்பு

டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிபுணர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்காக தாய்லாந்தில் இருந்து நிபுணர்கள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

சிறுவர் வைத்திய நிபுணர்கள் மற்றும் சுவாச நோய்க்கான விசேட வைத்திய நிபுணர்களுக்கு இந்த விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சுகாதார அமைச்சு மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அழைப்பின் பேரில், டெங்கு தொடர்பான ஆசிய சிகிச்சை நிலையத்தின் தலைமை அதிகாரி பேராசிரியர் சிறிதென் தலைமையிலான குழு இலங்கை வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள விசேட நிபுணர்களுடன் தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் இவர்கள் பல தடவைகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நாட்டின் விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர்களுக்கு பயிற்சியளிக்கும் நடவடிக்கை கடந்த சில நாட்களாக இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார்.

டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான திறன்களை விருத்தி செய்வதே இந்த பயிற்சி நடவடிக்கையின் நோக்கமென சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார். (ஸ்ரீ-4)










வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைக்களுக்கிடையில் நடத்தப்பட்ட மாகாணமட்ட விளையாட்டு போட்டிகள் வவுனியா நகரசபை பொது மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் 19 வயது பிரிவினருக்கிடையில் நடைபெற்ற வலைப் பந்தாட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பெற்ற யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, மூன்றாம் இடத்தைப் பெற்ற யா/ யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய வீராங்கனைகளையும், அதிபர், ஆசிரியர்கள், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

# ரஷ்யாவில் விமான விபத்து; 44 பேர் உடல் கருகிப்பலி



(மொஸ்கோ)

ரஷ்யாவில் வடமேற்கில் பெட்ரோசாவோட்ஸ்க் விமான நிலையத்தில் தரை இறங்குவதற்கு முன்பு தனியாருக்கு சொந்தமான விமானத்தின் இயந்திரம் தீப்பிடித்து எரிந்ததில் பயணிகள் உட்பட 44 பேர் பலியாகினர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருந்து 43 பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் 9 பேரை ஏற்றிக் கொண்டு ரஷ்ஏர் என்ற தனியாருக்குச் சொந்தமான விமானம் கடந்த 19 ஆம் திகதி பெட்ரோசாவோட்ஸ்க் விமான நிலையத்திற்கு சென்று கொண்டிருந்தது. விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கு ஒரு கிலோ மீற்றர் தூரம் இருந்த நிலையில் விமானத்தின் இயந்திரம் தீப்பிடித்து எரிந்து விழுந்தது.

இதில் விமானத்தில் பயணித்த 44 பேர் உடல் கருகி பலியாகினர். காயமடைந்தவர்களும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விமானம் தரை இறங்குவதற்கு முன்பு பனிமூட்டம் அதிகளவில் காணப்பட்டதால் தரையிறங்குவது குறித்து சரியான முடிவு எடுப்பதற்குள் விமானம் தீப்பற்றி எரிந்ததாக விமான நிலைய இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ஆனால் விமான விபத்திற்கான சரியான காரணம் தெரிய வரவில்லை. இது குறித்து விசாரணை நடத்த மொஸ்கோவில் இருந்து விசாரணைக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். (ஸ்ரீ-4)

# ஊழல் வழக்கில் துனிசியாவின் முன்னாள் ஜனாதிபதிக்கு 35 ஆண்டுகள் சிறை



துனிசியாவின் முன்னாள் ஜனாதிபதி ஷின் அல்-அபிடின் பென் அலியின் ஆட்சியில் இலஞ்ச ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து அவருக்கு எதிராக கடந்த ஜனவரி மாதம் மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இதைத் தொடர்ந்து அவர் பதவி விலகினார். மனைவி லைலா டிராஸ்ல் சியா மற்றும் தனது குடும்பத்தினரும் சவுதி அரேபியாவில் தஞ்சம் புகுந்தார்.

இதைத் தொடர்ந்து அரண்மனையில் சோதனையிடப்பட்டது. அங்கு ரூ.125 கோடி மதிப்பிலான பணம் மற்றும் தங்க, வைர நகைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் போதை மருந்து மற்றும் ஆயுதங்கள் பதுக்கி வைத்திருந்ததும் தெரிய வந்தது.

முன்னதாக அவரது குடும்பத்தினர் பதுக்கி வைத்திருந்த ரூ. 235 கோடி பணத்தை சுவிற்ஸர்லாந்து வங்கி முடக்கியது. இதைத் தொடர்ந்து நாட்டின் பணத்தை ஊழல் மூலம் கொள்ளையடித்து தவறான முறையில் பயன்படுத்தியதாக அவர் மீதும், அவரது மனைவி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி, அவரது மனைவி மீது துனிஷ் குற்றவியல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணை கடந்த 5 மாதங்களாக நடந்தது. அதில் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஊழல் வழக்கில் நீதிபதி தவுகாமி ஹபியான் தீர்ப்பு அளித்தார். அப்போது பென் அலிக்கும் அவரது மனைவி லைலாவுக்கும் தலா 35 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தார். மேலும் பென் அலிக்கு ரூ. 135 கோடி அபராதம் விதித்தும் உத்தரவிட்டார்.

அது தவிர போராட்டத்தின் போது பொது மக்களின் சொத்துக்களை சேதப்படுத்தியதற்காக 5 கோடி தினார் அபராதமும் விதிக்கக் கப்பட்டது. (ஸ்ரீ-2)




# இந்து முறைப்படி நடந்த ஆசியாவின் முதலாவது ஓரினச் சேர்க்கை திருமணம்



(காத்மண்டு)

நேபாளத்தில் முதன்முறையாக இந்து கோயில் ஒன்றில் இந்து மதசடங்கு முறைப்படி அமெரிக்காவைச் சேர்ந்த ஓரினச் சேர்க்கை (லெஸ்பியன்) தோழிகள் இருவர் திருமணம் செய்து கொண்டனர்.

புரோகிதர் மந்திரம் சொல்ல அங்குள்ள இந்து கோயில் அர்ச்சகர்கள் முன்னிலையில் இந்த திருமணம் நடந்தது. இந்த திருமணம் ஆசியாவின் முதன்முதலாக வெளிப்படையாக நடந்த லெஸ்பியன் திருமணம் எனக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் கலேறோடோவைச் சேர்ந்தவர் கர்டினி மில்செல் (41) இவர் ஒரு பேராசி ரியராக பணியாற்றி வருகிறார். சாரா வெல்டன் (48) இவர் அமெரிக்காவில் சட்டத்தரணியாக உள்ளார். இருவரும் நீண்ட நாட்களாக நெருங்கிய தோழிகளாக இருந்துள்ளனர்.

இந்நிலையில் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர்.

இதில் ஷாராவெல்டன் நேபாள் வம்சத்து அமெரிக்க வாழ் பெண் ஆவார். எனவே அவரது விருப்பப்படி நேபாளத்திலேயே இந்து முறைப்படி திருமணம் செய்ய கர்டினி மிட்செல் சம்மதித்தார். இருவரும் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு நேபாளம் வந்தனர். திருமணத்திற்கு தேவையான அனைத்து பொருட்களையும் வாங்கினர்.

நேற்று முன்தினம் காத்மண்டுவில் உள்ள தஷுன்காளி எனும் புகழ்பெற்ற இந்து கோயிலில் இந்து சமய சடங்குகளின் படி புரோகிதர்கள் மந்திரம் சொல்ல இவர்களது திருமணம் நடந்தது.

இந்த லெஸ்பியன் திருமணம் ஆசியாவில் முதல் லெஸ்பியன் திருமணம் என கூறப்படுகிறது. இந்த திருமணம் மூலம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிலும் ஓரினச் சேர்க்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். அரசுக்கு அந்நிய செலாவணி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு நேபாளத்தில் நிலவுகிறது. (ஸ்ரீ-2)




சிரியாவில் நடந்துவரும் கலவரத்தால் இராணுவத்தால் தாக்குதலுக்குள்ளான பொதுமக்கள் இடம்பெயர்ந்து துருக்கி எல்லைப் பகுதியான ஹாட்லே மாகாணத்தில் உள்ள யாலாடஜி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் 10 ஆயிரத்து 500ற்கும் மேற்பட்டோர் அகதிகளாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# லிபியாவில் நேட்டோ படையின் தாக்குதலில் 19 பொதுமக்கள் பலி

லிபியாவில் நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில் குழந்தைகள் உட்பட அப்பாவி பொதுமக்கள் 19 பேர் பலியானதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. லிபியா அரசின் உயர்மட்ட கவுன்சிலில் முக்கியமானவர் கோயுல்டி ஹமிதி. தலைநகர் டிரிபோலியில் இருந்து 70 கி.மீ தொலைவில் உள்ள சர்மான் என்ற இடத்தில் இவரது வீடு உள்ளது.

இவரது வீட்டை குறி வைத்து அண்மையில் நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில் எட்டு குழந்தைகள் உட்பட 19 அப்பாவி பொதுமக்கள் பலியானதாக அந்நாட்டு அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லிபியத் தலைவர் கடாபியின் மகன்களில் ஒருவருக்கு ஹமிதியின் மகளை திருமணம் செய்து கொடுத்ததாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலில் ஹமிதியின் குடும்ப உறுப்பினர்களும் பலியாகி இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த இரு தினங்களுக்கு முன் இதே போல் நேட்டோ படைகள் தாக்கியதில் அப்பாவி பொதுமக்கள் ஒன்பது பேர் பலியானதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# பெனாசீர் பூட்டோவின் கொலையில் ஒசாமா பின்லேடனுக்கும் தொடர்பு

## பாகிஸ்தான் அமைச்சர் தெரிவிப்பு

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரான பெனாசீர் பூட்டோ பாராளுமன்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட போது ராவல் பிண்டியில் குண்டு வீசியும் துப்பாக்கியால் சுட்டும் படுகொலை செய்யப்பட்டார். இதில் தலிபான் தீவிரவாதிகள் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அப்போது ஜனாதிபதியாக இருந்த முஷாரப் போதுமான அளவு பாதுகாப்பு தராததால் அவர் படுகொலை செய்யப்பட்டார் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. எனவே அவர் மீதும் பொலிஸ் அதிகாரிகள் மீதும் ராவல் பிண்டி தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. தற்போது வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் சமீபத்தில் சுட்டு கொல்லப்பட்ட அல்கொய்தா தலைவர் பின்லேடனுக்கும் தொடர்பு இருந்தது தற்போது தெரியவந்துள்ளது. இந்த தகவலை பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# மேலும் 5 மொழிகளில் தேடுதல் சேவையை விரிவுபடுத்தியது கூகுள்

மேலும் 5 இந்திய மொழிகளில் தனது மொழிபெயர்ப்பு தேடுதல் சேவையை விரிவுபடுத்த கூகுள் நிறுவனம் தீர்மானித்துள்ளது பெங்காலி, குஜராத்தி, கன்னடம், தமிழ். தெலுங்கு ஆகிய மொழிகளில் சேவையை மேம்படுத்துவது தொடர்பாக கூகுள் நிறுவனம் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இந்த சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்படுவதாக கூகுள் நிறுவன அறிவியல் ஆய்வாளர் ஆஷிஷ் வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

இந்தியா மற்றும் பங்களாதேசில் சுமார் 500 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்த ஐந்து மொழிகளை பேசி வருகின்றனர். 2009ஆம் ஆண்டு 11 மொழிகளில் தொடங்கப்பட்ட இந்த மொழிபெயர்ப்பு சேவை தற்போது 63 மொழிகளாக விரிவடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# சாய்பாபாவின் ஆச்சிரமத்தில் கோடிக்கணக்கில் கொள்ளை

## திடுக்கிடும் தகவல்கள் வெளியீடு



ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீக பணியில் ஈடுபட்டு வந்த சத்யசாய்பாபா கடந்த மாதம் ஜீவ முத்தி அடைந்தார். அவர் அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சமயத்தில் சாய்பாபாவின் ஆச்சிரமத்தில் இருந்து லொறி மூலம் விலை உயர்ந்த பரிசுப்பொருட்கள், பணம் கடத்தி செல்லப்பட்டதாக பக்தர்கள் புகார் கூறினார்கள். ஆனால் இதை பொலிஸார் கண்டுகொள்ளவில்லை.

இந்த நிலையில் சாய்பாபா ஆச்சிரமத்தில் இருந்து காரில் பெங்களூருக்கு கடத்தி செல்லப்பட்ட ரூபாய் 35 இலட்சம் பணம் கொடிகொண்டா பொலிஸ் சோதனையில் சிக்கியது. இந்தச்சோதனை நடந்த மறுநாளே புட்டபர்த்தி அருகே ஒரு சொகுசு பஸ்சில் பலகோடி ரூபா பணம் கடத்தப்பட்டது. இதையறிந்த பொலிஸார் பஸ்ஸை மடக்கி பல கோடிரூபாய் பணத்தை பறிமுதல் செய்தனர். சாய்பாபாவின் ஆச்சிரமத்தில் உள்ள பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆச்சிரமத்தின் தலைமைப்பாதுகாப்பு அதிகாரி பிரதானிடம் பொலிஸார் நேற்று முன்தினம் விசாரணை நடத்தினர். பின்னர் அவர் மாலை விடுவிக்கப்பட்டார். இது பற்றி ராஜலசீமா ஐ.ஜீ சந்தோஷ் மெக்ரா நிருபர்களிடம் தெரிவிக்கும் போது, சாய்பாபாவின் ஆச்சிரமத்தில் பல கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இது பற்றி பொலிஸார் 379 இன் பிரிவின் (திருட்டு) கீழ் வழக்கு பதிவு செய்துள்ளோம். ரூபா 35 இலட்சம் கடத்தியது பற்றி நாங்கள் நடத்திய விசாரணையில் பல்வேறு தகவல்கள் தெரிய வந்துள்ளன .

இப்பணத்தை பக்தர்கள் சாய்பாபாவுக்கு நன்கொடையாக வழங்கி உள்ளனர். அந்த பணத்தைத்தான் 3 பேர் திட்டமிட்டு பெங்களூருக்கு கடத்தி உள்ளனர். இந்த கொள்ளைச் சம்பவத்தில் சாய்பாபா அறக்கட்டளை நிர்வாகிகள் 2 பேருக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது. அவர்களில் ஒருவர் சென்னை தொழில் அதிபர், இன்னொருவர் சாய்பாபாவின் சகோதரரின் மகன் ரத்னாகர். இருவருக்கும் அழைப்பாணை அனுப்பி உள்ளோம்.

இதுவரை அவர்கள் விசாரணைக்கு வரவில்லை. இதனால் எங்களுக்கு அவர்கள் மீது மேலும் சந்தேகம் அதிகரித்துள்ளது என்றார். காரில் கடத்தப்பட்ட ரூபா 35.53 இலட்சம் பணத்தை பொலிஸார் அனந்தபுரம் நீதிமன்றில் ஒப்படைத்தனர். பின்னர் அப்பணம் ஸ்டேட் வங்கி ஒவ் இந்தியாவில் செலுத்தப்பட்டது. (ஸ்ரீ-4)

## ராசாமீதான குற்றச்சாட்டுகளை பகிரங்கப்படுத்த உத்தரவு

(புதுடில்லி)


முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா மீதான குற்றச்சாட்டுக்களைப் பகிரங்கப்படுத்தவேண்டும் என்று பிரதமர் அலுவலகத்துக்கு தகவல் ஆணையம் அறிவுத் தியுள்ளது.

ராசா மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு விவகாரங்களை தெரிவிக்க வேண்டும். அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்ட நிலையில் அவரை மத்திய அமைச்சரவையில் நீடிக்க விட்டது. ஏன் என்பது போன்ற விவரங்களை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் அளிக்கும்படி தகவல் உரிமை ஆணையத்திடம் ஒருவர் மனு செய்திருந்தார்.

இதையடுத்து ராசா மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை அளிக்கும்படி மத்திய தகவல் ஆணையர் சைலேஷ் காந்தி பிரதமர் அலுவலகத்துக்கு அறிவுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக சைலேஷ் காந்தி எழுதியுள்ள கடிதத்தில் ராசா மீது கூறப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான ஆவணங்களின் உத்தரவாத நகல்களை எதிர்வரும் ஜுலை 10 ஆம் திகதிக்குள் அளிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்



### மத்திய அரசுடன் பேச்சு தோல்வி

## ஓகஸ்ட் 16 ஆம் திகதி முதல் அன்னாஹசாரே உண்ணாவிரதம்



சமூக சேவகர் அன்னா ஹசாரே ஊழலுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி வருகிறார். ஊழல் புகார்களை விசாரிக்க பாராளுமன்றத்தில் தனி சட்டம் கொண்டு வர வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன் தொடர் உண்ணாவிரதம் இருந்து நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

அவரது போராட்டத்தால் மத்திய அரசு பணிந்து ஊழல் புகார்களை விசாரிக்க லோக்பால் மசோதா கொண்டு வர சம்மதித்தது. இந்த மசோதாவை உருவாக்குவதற்காக மத்திய மந்திரிகள் மற்றும் சமூகசேவகர்கள் அடங்கிய லோக்பால் மசோதா வரைபு குழுவை மத்திய அரசு நியமித்தது.

பிரணாப் முகர்ஜி தலைமையில் 5 மத்திய மந்திரிகள் அன்னா ஹசாரே உட்பட 5 சமூக ஆர்வலர்களும் இதில் இடம் பெற்றுள்ளனர். இந்த குழுவினர் டில்லியில் கூடி லோக்பால் அமைப்பின் விசாரணை வரம்பு குறித்து ஆலோசனை நடத்தியது.

இதில் லோக்பால் வரம்புக்குள் பிரதமரையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்பதில் குழுவினரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. 8 முறை கூடி பேசியும் உடன்பாடு ஏற்படவில்லை.

இதையடுத்து 9 ஆவது மற்றும் இறுதிக் கூட்டம் டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மத்திய மந்திரி ப. சிதம்பரம் தவிர மற்ற 9 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்திலும் உடன்பாடு ஏற்படவில்லை. லோக்கால் அமைப்பில் 11 உறுப்பினர்களை அரசியல் சார்பற்றவர்களாக நியமிக்க வேண்டும் என்றும் லோக்பால் அமைப்பு உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்யும் உரிமை பொது மக்களுக்கு இருக்க வேண்டும்.

பிரதமர், நீதிபதிகள், எம்.பி.கள் செயற்பாடு ஆகியவற்றையும் லோக்பால் வரம்புக்குள் கொண்டுவர வேண்டும். சி.பி.ஐ.யை சுதந்திரமான அமைப்பாக ஆக்க வேண்டும் என்று அன்னா ஹசாரே சமூக சேவகர்கள் வற்புறுத்தினார்கள்.

இதற்கு மத்திய மந்திரிகள் சம்மதிக்கவில்லை. இதனால் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படாமல் தோல்வியில் முடிந்தது. லோக்பால் விசாரணை வரம்பு குறித்த தங்கள் யோசனையை மத்திய மந்திரிகள் ஏற்காததால் திட்டமிட்டபடி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் டில்லியில் உண்ணாவிரதம் தொடங்கும் என்று அன்னா ஹசாரே கூறியுள்ளார்.

இது குறித்து பொதுமக்கள் தரப்பு பிரதிநிதியான அரவிந்த் கெஜ்வால் கூறுகையில், லோக்பால் அமைப்பை அரசியல் ஆதிக்கம் நிறைந்ததாக மாற்றி தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மத்திய அரசு விரும்புகிறது. எதிர்க்கட்சியை ஒடுக்க சி.பி.ஐ. அமைப்பை மத்திய அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள விரும்புகிறது.

இதன் காரணமாகவே தகவல் பெறும் உரிமை சட்டத்தில் இருந்து சி.பி.ஐ க்கு விலக்கு அளிக்க அரசு விரும்புகிறது. சி.பி.ஐ சுதந்திரமான அமைப்பாக செயற்பட மத்திய அரசு விரும்பவில்லை என்றார். (ஸ்ரீ-2)

## மீனவர்களை விடுவிக்க வலயுறுத்துமாறு பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்

(சென்னை)

இலங்கைக் கடற்படை பிடித்துச் சென்ற 23 மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கையை வலியுறுத்தக்கோரி பிரதமர் மன்மோகன்சிங்குக்கு முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், தமிழகத்தைச் சேர்ந்த 23 மீனவர்கள் எதிர்பாராதவிதமாக இலங்கையின் கடல் பகுதிக்குள் நுழைந்துள்ளனர். அவர்களை அந்த நாட்டைச் சேர்ந்த கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து தங்களது கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

மாநிலத்தில் அ.தி.மு.க அரசு ஆட்சிப் பொறுப் பேற்றதற்கு பின் நான்கு மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து அழைத்துச் சென்றனர். இதுகுறித்து கடந்த 7 ஆம் திகதி தங்களுக்கு கடிதம் எழுதினேன். இந்தக் கடிதத்துக்கு தாங்கள் 15 ஆம் திகதி பதில் அனுப்பினீர்கள். இந்தப் பிரச்சி னையில் நீங்கள் தலையிட்டதை அடுத்து மீனவர்கள் அனைவரும் கடந்த 17 ஆம் திகதி விடுவிக்கப்பட்டனர்.


பாக் ஜலசந்தி பகுதியில் இராமேஸ்வரத்துக்கு மிக அருகிலேயே இலங்கையின் கடல் எல்லை அமைந்துள்ளது. இதனால் தமிழக மீனவர்கள் தெரியாமல் அங்கு செல்வதும் அவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வதும் பின் விடுவிப்பதும் தொடர்சம்பவங்களாக நடந்து வருகின்றன. இந்தச் சம்பவங்கள் தமிழகத்தில் உள்ள மீனவர்கள் மத்தியில் பதற்றத்தை உருவாக்கி வருகின்றன. டில்லியில் தங்களை நேரில் சந்திக்கும் போது தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதித்தேன்.

மேலும் இலங்கை செல்வதற்கு முன்னதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனன் என்னைச் சந்தித்தார். அவரிடமும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதித்தேன். இந்தச் சூழலில் இலங்கைக் கடல் எல்லைக்குள் எதிர்பாராதவிதமாக நுழைந்ததற்காக 23 மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களுடைய 5 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினை மிகவும் கவலை தருகிறது.

இந்த விடயத்தில் தாங்கள் உடனடியாக தலையிட்டு கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்க இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்று தனது கடிதத்தில் முதல்வர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## கண்ணாடியை கழற்றிவிட்டு கண்ணீர் விட்ட கருணாநிதி



தன் மகள் கனிமொழியை தி.மு.க தலைவர் கருணாநிதி டில்லி திகார் சிறையில் சந்தித்து கண்ணீர் மல்க ஆறுதல் தெரிவித்துள்ளார். கனிமொழியை கண்டதும் தன் கறுப்புக் கண்ணாடியை கழற்றிவிட்டு பார்த்த போது கண்ணிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் பெருக்கெடுத்தது.

கனிமொழியை தனியாக 15 நிமிடங்கள் சந்தித்தார் கருணாநிதி. ராஜா, சரத்குமார் ரெட்டி ஆகியோரை சந்தித்து பேசியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 11 மணியிலிருந்து மாலை 4 மணி வரை தங்கியிருந்த கருணாநிதியை காங்கிரஸ் தலைவர்கள் யாரும் வந்து சந்திக்கவில்லை. ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் கூட்டுச் சதியாளர் என்ற குற்றச்சாட்டை சுமந்து டில்லி திகார் சிறையில் தி.மு.க எம்பி.யான கனிமொழி இருந்து வருகிறார். சி.பி.ஐ நீதிமன்றம், டில்லி மேல்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் என மூன்று இடங்களிலுமே அவரது பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து இன்னும் குறைந்தது 40 நாட்கள் வரையிலாவது சிறையில் இருக்கப் போவது உறுதி என்ற நிலை ஏற்பட் டுள்ளது.

(ஸ்ரீ-2)





யாழ்.நகர புல்லுக்குளத்தையும் அதனை அண்மித்த பகுதிகளையும்அழகு படுத்தி பொழுதுபோக்கு மையமாக்கும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இத்திட்டத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆரம்பித்து வைப்பதையும் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:-என்.குமார், அலுவலக செய்தியாளர்)*

## அதிபர் பதவி வெற்றிடம்

தீவகக்கல்வி வலயத்தில் யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்-11 பாடசாலையில் அதிபர் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.


அதற்கு தீவகவலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் தரத்தினை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவையை சேர்ந்தவர்களின் (வகுப்பு-1,வகு ப்பு-2-11) விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விண்ணப்பப்படிவங்களை தீவககல்வி வலயத்தில் பெற்று 01.07.2011 இற்கு முன் விண்ணப்பிக்குமாறு தீவக கல்விவலயப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மற்றொரு நாட்டின் நீதிமன்றில் ஆஜராக வேண்டிய தேவை ஜனாதிபதிக்கில்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



மற்றுமொரு நாட்டின் மாநில நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய எந்தத் தேவையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு இல்லையென அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மாநில நீதிமன்றமொன்று ஜனாதிபதிக்கு விடுத்துள்ள அழைப்பு தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ என்பவர் இலங்கை மக்களால் ஜனநாயக ரீதியாக தேர்தல் மூலம் தெரிவான மக்கள் தலைவர். ஆதலால் சர்வதேச ரீதியில் சட்ட ரீதியான அங்கீகாரம் அவருக்குண்டு. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் ஜனாதிபதிக்கும் வெளிநாடுகளுக்குமிடையிலான உறவை சீர்குலைப்பதற்கு சிலர் முயற்சிக்கின்றனர்.

எனினும் இப்பிரச்சினைக்கு மத்தியில் ஜனாதிபதிக்குக் கிடைக்கும் சர்வதேச ரீதியான ஆதரவு விசேடமானதாகுமென அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுடன் இருதரப்பு விடயங்கள் குறித்து செயற்படும் போது அந்நாட்டு அரசாங்கத்துடன் மாத்திரம் இணைந்து செயற்பட இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ளது.

இருதரப்புக்கும் முக்கியமான விடயங்கள் குறித்து அந்நாட்டு மாநிலம் ஒன்றிடம் மாத்திரம் பகிர்ந்து கொள்ள வேண்டிய எந்தத் தேவையும் இலங்கைக்கு இல்லை. பிரச்சினை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடும் இதுவே என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# இலங்கைக்கு எதிராக பிரசாரம் செய்வோருக்கு பதிலளிக்க தயார்

## அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவிப்பு



தேசத்திற்கும் இராணுவத்தினருக்கும் எதிராக பிரசாரம் செய்பவர்களுக்கு பதிலளிப்பதற்கு தயாராகவுள்ளதாக தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிடிய தெரிவித்துள்ளார்.

ருவன் வெல்லவில் அமைக்கப்பட்ட கல்வி நிலையம் ஒன்றின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் தகவல் தொழில்நுட்பதுறை அறிவை இந்த கல்வி நிலையத்தின் ஊடாக விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. சுமார் 30 வருடங்களாக நீடித்த யுத்தத்தை வெற்றி கொண்டமை பலருக்கு பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இதன் காரணமாக சிலர் தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக பல்வேறு பிரச்சினைகளை தோற்றுவிப்பதாகவும், அவற்றிற்கு தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாக பதிலளிக்க தாம் தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

சனல் 4 தொலைக்காட்சியின் மூலம் பொய்யான வீடியோ காட்சிகளை வெளியிட்டு தேசத்தின் மீதும் இராணுவ வீரர்கள் மீதும் சேறு பூசுவதற்கு சிலர் முனைவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அடுத்த வருடத்திற்கான தேசத்திற்கு மகுடம் கண்காட்சியை அநுராதபுரம், தந்திருமலை, ஊயாமடுவ பிரதேசத்தில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் கால்நடை வள அமைச்சிற்கு சொந்தமான சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கண்காட்சியை நடத்தவுள்ளதோடு அதற்கேற்ற வகையில் பிரதேசத்தின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்யவும் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

(கொழும்பு)

சென்னையில் உள்ள இலங்கை தூதகரத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழக மீனவர்கள் சிலர் இலங்கை பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்களால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்களால் இலங்கைத் தூதரகத்துக்கு எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாதிருக்கும் வகையில் இந்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2-4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

Allianz Life Insurance Lanka LTD


மேகவண்ணன் ஜெசிந்திரன்


கிருஷ்ணபிள்ளை சுதாகரன்


கணபதிப்பிள்ளை ஸ்ரீரஞ்சன்

23.06.2011 அன்று Hotel Thalathari இல் நடைபெறும் Sales Convention இல் Silver Award பெறும் இவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
Allianz Life Insurance
Branch Managers & Staff

(சி-3551)


# கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(கிளிநொச்சி)

145 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3)

நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதைவிட உயர்ந்த மனத் துணிவு வேறு கிடையாது.

- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இலங்கையின் இன ஒற்றுமைக்காக அமைச்சர் ராஜித உரைத்த மகா தத்துவம்

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இன்னொரு பிரபாகரன் வரும் வரை காத்திருக்க கூடாது என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் இந்தக் கருத்து மிகவும் மரியாதைக்குரியதும், சரியான நேரத்தில் சொல்லப்பட்டதுமாகும்.

அதிலும் அமைச்சராக இருந்துகொண்டு அவர், இவ்வாறு கூறியமை அவரின் நேர்மையையும், யதார்த்தமான சிந்தனையையும் எடுத்துக்காட்டும்.

ஒரு தடவை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, தென்மராட்சிப்பகுதியில் ஏற்பட்ட யுத்த அழிவுகளை வியட்நாம் அழிவுக்கு ஒப்பானதெனக் கூறியிருந்தார்.

அழிவுகளை, அதன் தாக்கங்களை தமிழ், சிங்கள இனத்துவ அடிப்படையில் நோக்காமல் இந்த நாட்டில் ஏற்பட்ட அழிவு என்ற நோக்கில் பார்ப்பதே நல்ல மனிதர்களுக்கான உயர்ந்த பண்புடைமை.

அத்தகைய உயர்ந்த பண்புடமையை அமைச்சர் ராஜித சேனாரத்ன கொண்டுள்ளார் என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபணம் செய்வதாக 'இன்னொரு பிரபாகரன் வரும்வரை காத்திராமல், அதிகாரப் பரவலாக்கலை தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டும்' என்ற அவரின் கருத்து அமைந்துள்ளது.

போர் வெற்றி, விடுதலைப் புலிகளின் தோல்வி என்ற மகிழ்ச்சியில் மார்தட்டும் தென்பகுதி அரசியல் அறியாமை என்னும் இருளில் மூழ்கிப் போயுள்ளது.

யுத்தம் முடிந்துவிட்டது என்றால் அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதாகும்.

தமிழ் இனத்தின் பிரச்சினைக்குரிய தீர்வை உடனடியாக முன்வைப்பதன் ஊடாக தமிழ் மக்கள் சந்தித்த போர் அழிவுகளில் இருந்து அவர்களை மீட்கவும் இலங்கைத் தீவில் இன ஒற்றுமையை ஏற்படுத்தவும் முடியும்.

ஆனால் போருக்குப் பின் இலங்கை அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை முற்றாகத் தவிர்த்து, தமிழ் இனத்தின் அடிப்படை உரிமைகளில் கை வைக்கும் நடவடிக்கைகளிலேயே அதீத அக்கறை செலுத்தி வருகிறது.

இந்நிலையில் தான் அமைச்சர் ராஜித சேனாரத்ன, இலங்கை அரச தலைமைக்கும் சிங்கள மக்களுக்கும் ஒரு பெரும் தத்துவத்தை போதித்துள்ளார்.

இந்தத் தத்துவம் இலங்கையில் இன ஒற்றுமைக்காக உரைக்கப்பட்ட மகா தத்துவம் என்றே கூறவேண்டும்.

ஏனெனில், அரசு எதைச் சொல்கிறதோ அதுவே சரியென கூறுவதே அரசியல் எனக் கருதும் இன்றைய காலநிலையில், அரசின் அமைச்சராக இருக்கும் ராஜித மிகப்பெரியதொரு யதார்த்தத்தை எந்தத் தயக்கமும் இன்றி வெளிப்படையாகக் கூறியிருப்பது ஒரு மந்திரிக்கு இருக்க வேண்டிய மதிநுட்பத்தையும் அஞ்சாமையையும் காட்டுவதாகும்.

அமைச்சர் ராஜிதவின் கருத்துக்கு ஆட்சியாளர்கள் கொடுக்கின்ற முக்கியத்துவம் எத்தகையது என்பதைக் கூறமுடியாவிட்டாலும், அமைச்சர் ராஜித கூறியதை செய்யத் தவறின் அவர் கூறியது நிதர்சனமாகும் என்பதை மட்டும் எம்மால் அறுதியிட்டுச் சொல்லமுடியும்.

## அதிபர் பதவி வெற்றிடம்


(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்.சிதம்பராக் கல்லூரி தரம் 1ஏபி பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரம் 1 மற்றும் இலங்கை அதிபர் சேவை தரம் 2-1 ஐச் சேர்ந்த பட்டதாரி அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த அதிபர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், மாதிரி விண்ணப்ப படிவத்தை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பார்வையிட்டு அதற்கமைய தங்கள் விண்ணப்பத்தினை 07.07.2011 ஆந் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார். (எ)

## குருதிக் கொடையாளர்கள் உயிர்காக்கும் உத்தமர்கள்




இரத்ததானம் -சுலபமானது

✱ குருதி வழங்கும் பிரகடனப் பத்திரம் பூர்த்தி செய்தல்:- 5-10 நிமிடம்

✱ வைத்தியப் பரிசோதனை:- 5-10 நிமிடம்

✱ பதிவு செய்தல்:-5-10 நிமிடம்

✱ குருதி வழங்கல்:-10-15 நிமிடம்

✱ ஓய்வும் நீராகாரம் அருந்தலும்:- 10 நிமிடம்

✱ விசேட உணவு உட்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

✱ கடினமற்ற நாளாந்த வேலைகளில் அன்றே ஈடுபடலாம்.

✱ அன்று கடின வேலைகள், கனரக வாகனம் ஓட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

**குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா**
**காலம்: 2011 ஆனி 26 காலை 9.00 மணி**
**இடம்:- வீரசிங்கம் மண்டபம்**

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம். தொ.பே:-0212223063

## வடக்கு,கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் 2020 க்குள் முற்றாக அகற்றப்படும்

### அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள சகல கண்ணிவெடிகளும் மிதிவெடிகளும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் முற்றாக அகற்றப்பட்டு விடும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

வடக்கு கிழக்கை உள்ளடக்கியதாக இதுவரையில் 5594.89 சதுர கிலோமீற் றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் மற் றும் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான ரவி கருணாநாயக்கவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்து, டென்மார்க், பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட நாடுகள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் கண்ணிவெடி மற்றும் மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதன்படி 258.51 சதுர கிலோமீற்றர் பரப்பளவு சுவிட்சர்லாந்துக்கும், 1336.29 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு டென்மார்க்கிற்கும், 650.59 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கு 1273.90 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பும் ஒதுக்கப்பட்டுள்ளன.

2002 முதல் இன்று வரையில் மேற்படி 4 நாடுகளும் நிறுவனங்கள் மற்றும் இராணுவத் தரப்பினாலும் 5594.89 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்புக்களில் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இதற்கென இதுவரையில் 149 கோடியே 28 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மேலும் அமெரிக்கா, சீனா, அவுஸ்திரேலியா, யு.என்.எச்.சி.ஆர், ஐ.ஓ.எம் மற்றும் பொருளாதார அமைச்சு ஆகியவை கண்ணிவெடிகள், மிதிவெடிகளை அகற்றுவதற்கான உபகரணங்களை வழங்கியுள்ள அதேவேளை யுனிசெப் மற்றும் அமெரிக்கா ஆகியன 65 வாகனங்களையும் வழங்கியுள்ளன.

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அனைத்தும் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் முற்றாக அகற்றப்பட்டு விடும் .இந்த இலக்கினை கொண்டே அரசு செயற்பட்டு வருகிறது என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தொடர்ந்தும் கூறினார். (ஸ்ரீ-4)

## ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆயுள்வேதபாதுகாப்புச்சபையின் மாதாந்தக்கூட்டம்நாளைவெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் தலைவர் பிறிட்ரோடக்ளஸ் தலைமையில் நடைபெறும்.

இதில் வைத்திய கலாநிதி நாகநாதன் எயிட்ஸ் சம்பந்தமாக கருத்துக்களை வழங்க உள்ளார். (ஸ்ரீ)

## சத்திய தரிசனம்

5



## பாமினி

பாமினியின் வீட்டருகே ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது. அங்கே இரத்தினக்குருக்கள் பூசை செய்து வருகிறார். நல்ல குணநலன்களை தன்னகத்தே கொண்டிருக்கும் தெய்வீகக் குருக்கள் அவராவார். காலையில் கோயிலின் பூசைக்கான ஆயத்த மணி ஒலித்ததுமே பாமினி அங்கு பிரசன்னமாகிவிடுவாள். குருக்களுக்கு பூசைக்கான பூக்களை ஆய்ந்து கொடுத்தும், கோயிலில் உள்ள குப்பைகளைக் கூட்டிப் பெருக்கிச்சுத்தம் செய்தும் இறைபணி செய்வாள். பூசை முடிந்ததும் குருக்களின் கையால் விபூதிப் பிரசாதம் பெற்றுத்தான் அவள் வீடு திரும்புவாள்.

ஒவ்வொரு நாளும் அதிகாலை வேளையில் தன் துயில் நீக்கி எழுந்து விடுவாள் பாமினி. எழுந்தவுடன் தனது அன்னையையும், தந்தையையும் அவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்குவாள். அவர்களின் ஆசிபெற்ற பின்னால் தான் தனது அன்றாடக் கடமைகளையெல்லாம் அவள் செய்யத் தொடங்குவாள். இந்த நல்ல பழக்கம் அவள் சாயி நிலையமொன்றில் கற்றுவரும் பாலவிகாஸ் கல்வியினால் வந்ததாகும்.

இந்த பாலவிகாஸ் கல்வித்திட்டம் என்பது பகவான் சத்திய சாயி பாபா வினால் இயற்றப்பட்ட கல்வித்திட்டமாகும். உலகின் அனைத்துக் குழந்தைகளுக்குமென அவரால் தயாரிக்கப்பட்ட மனித மேம்பாட்டுக்குரியதான கல்வித் திட்டம் இதுவாகும்.

"ஓம் பூர் புவஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ நப்ரசோதயாத்"

என்னும் காயத்திரி மந்திரத்தால் அவளது ஆன்மீகக் கல்விக்கு வழிகாட்டுகிறாள். இந்த ஆன்மீகக் கல்வியானது பாமினியை சிறந்ததோர் நிறைமகளாகவும், சமூக நலன் பேணும் நற்பண்புள்ள ஒரு யோகினியாகவும் வளர்த்தெடுக்கும் என்பது திண்ணம்.

**சந்திரா தனபாலசிங்கம்**

# இந்தியாவுக்கு தங்கம் கடத்திய இலங்கை பிரஜை கைதானார்


இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு தங்க கட்டிகளை கடத்திச் சென்ற இலங்கை பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவலை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கு இடமானமுறையில் செயற்பட்டதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 10 கிலோ எடையுள்ள தங்க கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை 40 இலட்சம் இந்திய ரூபாய்கள் மதிப்புடையவை என கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)




சித்தங்கேணி வட்டு. இந்து கல்லூரிக்கு பாடசாலை தளபாடங்களை இறக்குவதற்காக சென்ற லொறியும் அவ் வீதியூடாக பயணித்த முச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதைப் படத்தில் காணலாம்.

# இலங்கை போக்குவரத்து சபையில் நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையில் நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் எதிர்கால திட்டங்கள் குறித்த கலந்துரையாடலொன்று ஜனாதிபதி தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தனியார் துறைக்கு போட்டியாக போக்கு வரத்து சேவையை முன்னெடுப்பதற்கான எதிர்கால திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத் திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

போக்குவரத்து சபையின் ஊழியர்களை பாதுகாத்தல் மற்றும் சிறந்த சேவைகள், மக்களுக்கு வழங்கும் முறைகள் தொடர்பில் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் போக்குவரத்து சபை ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட சில பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பிலும் ஜனாதிபதி குறித்த பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வராசா விமலாதேவி (ராசாத்தி)



16/10, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா விமலாதேவி 18.06.2011 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சிவக்கொழுந்து தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற செல்லத்துரை செல்வராசாவின் மனைவியும், நளினி, அருள்ராஜ், யுவனி ஆகியோரின் தாயாரும், சிவநாதன், டக்ஷினி, கணேசலிங்கம் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சரோஜாதேவி, ஜெயராசலிங்கம், ஜெயதாம்பாள், சற்குணலிங்கம் ஆகியோரின் சகோதரியும், அபீஷன், ஹம்ஷாயினி, சரணாபவன், பிறமியா, அருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.06.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**16/10, சீனியர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

(5276)

## இரத்தினசிங்கம் பிரபாகரன்



பூநகரி தம்பிராயை சொந்த இடமாகவும், இல. 140, கட்சன் வீதி, வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் பிரபாகரன் 21.06.2011 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் உமாராணியின் அன்புக் கணவரும், நிகேதன், மிதுசிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயபுரம் பூநகரியைச் சேர்ந்த முன்னாள் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளரும், தற்போது கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்ல பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரும் ஆகிய து.இரத்தினசிங்கம்-பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வரும், கருணாகரன், சுதாகரன், சுலோஜனா, அஞ்சனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தகுமாரி, சிவரஞ்சினி, ஜமுனாகரன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23.06.2011 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வட்டக்கச்சி மம்மில்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**தகவல்:- தந்தை:- து.இரத்தினசிங்கம், இல. 305, ஜெயபுரம் வடக்கு.**
**மனைவி:- பி.உமாராணி, இல.140, கட்சன் றோட், வட்டக்கச்சி.**

(5275)

# நீதிமன்றத்தால் அபராதம்

(சாவகச்சேரி)

சட்டவிரோதமான முறையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸாரால் கெருடாவில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 2 முன் குற்றம் இருப்பதை அவதானித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்ததுடன் செலுத்த தவறின் 8 மாத சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-29-24)

✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கழிவு நீர் பாய்ச்சிய குற்றச்சாட்டின் பெயரில் ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாக கண்டு ஆயிரம் ரூபா அபராதமும்செலுத்த தவறின் ஒருமாத சாதரண சிறைத் தண்டனையும் அனுபவிக்கவேண்டுமென தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிலும் கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பெயரிலும் இரு நபர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாக கண்டு அனுமதிப்பத்திரமின்றி வாகனம்செலுத்தியதற்கு ஆயிரம் ரூபாவும் கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிற்கு 5ஆயிரம்ரூபாஅபராதம்விதித்து செலுத்த தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் அனுபவிக்கவேண்டுமென தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-3)

✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

ஒலியெழுப்ப தடைவிதித்துள்ள இடத்தில் ஒலியெழுப்பிய குற்றச்சாட்டின் பெயரிலும் வருமான வரிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிலும் இருநபர்களை கைது செய்த யாழ். பொலிஸார் நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாக கண்டு மேற்குறித்த இரு குற்றச்சாட்டுகளுக்கும் தலா 500 ரூபா அபராதமும் செலுத்த தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின பெயரில் நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வாகனத்தை அதிவேகமாக செலுத்திச் சென்ற குற்றச்சாட்டின் பெயரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையில் குற்றவாளியாகக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

✦ ✦ ✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

மது போதையில் வாகனத்தை செலுத்தி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பெயரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 3500 ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

✦ ✦ ✦ ✦ ✦

அனுமதிப்பத்திரம் இன்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

# சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் செப்டம்பர் 23இல் தொடக்கம்

## இறுதிப் போட்டி சென்னையில்

சம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகள் சென்னை பெங்களூர், கொல்கத்தா ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் செப்டம்பர் 23முதல் ஒக்டோபர் 9 வரை இப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கடந்த இரு போட்டிகளில் இல்லாத வகையில் இந்த ஆண்டு மொத்தம் 13 அணிகள் போட்டியில் பங்கேற்கவுள்ளன.

ஐ.பி.எல். போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முறையே இரண்டாவது, மூன்றாவது இடத்தைப்பிடித்த பெங்களூர் றோயல் சலன்ஞர்ஸ், மும்பை இந்தியன்ஸ் உள்ளிட்ட அணிகள் இப் போட்டியில் பங்கேற்கின்றன.

செப்டம்பர் 23இல் பெங்களூரின் தொடக்க நிகழ்ச்சியும் முதல் ஆட்டமும் நடைபெறும். ஒரு அரையிறுதி ஆட்டமும் அங்கு நடைபெறும் சென்னையில் ஒரு அரையிறுதி, இறுதி ஆட்டம் நடத்தப்படும்.

சர்வதேச அளவில் 20 ஓவர் போட்டியில் முன்னிலையிலுள்ள 7 அணிகள் நேரடியாகவும் பிற 6 அணிகளில் தகுதிச்சுற்று மூலம் மூன்று அணிகள் தேர்வு செய்யப்படும்.

ஐ.பி.எல். போட்டியில் முதல் மூன்று இடங்கள் பெற்ற அணிகள் தவிர தெற்கு அவுஸ்திரேலியா ரெட்பேக்ஸ், நியூத்சௌத் வேல்ஸ் புளுஸ் ஆகிய அவுஸ்திரேலிய அணிகளும் தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ், கேப் கோப்ராஸ் ஆகிய அணிகள் நேரடியாக சம்பியன்ஸ் சீப் போட்டியில் விளையாடுகின்றன.

### தகுதிச் சுற்று

6 அணிகளை தேர்வு செய்வதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் ஹைதராபாத்தில் செப்ரம்பர் 19முதல் 21வரை நடைபெறுகிறது. இதில் பங்கேற்க ஐ.பி.எல்லில் 4ஆவது இடம் பிடித்த கொல்கத்தா நைட்ரைடர்ஸ், நியூஸிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து, இலங்கையிலுள்ள உள்ளூர் அணிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் நடைபெற்ற இரு சம்பியன்ஸ் லீக் போட்டிகளில் 10 அணிகள் இடம்பெற்றன. அவை இரு பிரிவாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றது. இரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

முதலாண்டில் நியூசவூத்வேல்ஸ் புளூஸ் அணியும், இரண்டாவது ஆண்டில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் சம்பியன் பட்டம் வென்றன.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பி.சி.சி.ஐ.) தலைமையில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க நாடுகளின் கிரிக்கெட் வாரியங்கள் இணைந்து சம்பியன்ஸ் லீக் போட்டியை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலிய வீரர்களுக்கு அனுமதி

இலங்கையில் நடக்கும் சிறிலங்கா பிறிமியர் லீக் இருபது-20 தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலிய வீரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் யூலை 19 முதல் ஆகஸ்ட் 4 வரை 7 அணிகள் பங்கேற்கும் உள்ளூர் இருபது-20 தொடர் நடக்கிறது. இதில் பங்கேற்க இந்திய வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் தற்காலிக தலைமை அதிகாரி மைக்கெல் பிரவுன் இது குறித்து கூறுகையில்,

நாங்கள் இலங்கை கிரிக்கெட்டுக்கு ஆதரவு தரவிரும்புகிறோம். அதைபோல எங்களது பிக் பாஷ் இருபது-20 தொடரில் இலங்கை அணி வீரர்கள் பங்கேற்க வேண்டும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

## இலங்கை அணிக்கு தலைவராக திலின கண்டம்பி

காயத்திற்குள்ளாகியுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணித்தலைவர் டி.எம்.டில்சான் எதிர்வரும் யூன் 25ஆம் திகதி நடைபெறவுள்ள இங்கிலாந்துடனான இருபது-20 கிரிக்கெட் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இதனால் திலின கண்டம்பி அணிக்குத் தலைமை தாங்கவுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்திய-மேற்கிந்தியத் தீவுகள் முதல் டெஸ்ட்: முதல் இன்னிங்ஸில் இந்தியா-246, மே.தீவுகள்-173

இந்தியா-மேற்கிந்தியதீவுகள்அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 246 ஓட்டங்களையும் மேற்கிந்திய அணி 173 ஓட்டங்களையும் பெற்றன. ஜமேக்காவின் சபீனா பார்க்கில் ஆரம்பமான இப் போட்டியில் இந்திய அணி சார்பில் சுரேஷ்ரெய்னா 82 ஓட்டங்களைப்பெற்றார்.

ஹர்ப்பஜன் சிங் 70 ஓட்டங்களைப் பெற்றார்.

முதல்நாள் ஆட்டமுடிவின் போது இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 246 ஓட்டங்களையும் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 34 ஓட்டங்களைப்பெற்றது.

இரண்டாவது நாளான நேற்று முன்தினம் அவ் அணி 173 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அட்ரியன் பாரட் 64 ஓட்டங்களைப் பெற்றார். அவ் அணி சார்பில் வேறு எவரும் அரைச்சதத்தை நெருங்கவில்லை.

இந்தியப் பந்துவீச்சாளர்களில் இஷாந்த் சர்மா 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார் 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டக்களையும் வீழ்த்தினர்.

ஹர்பஜன் சிங், அமித் மிஷ்ரா தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர் இந் நிலையில் நேற்று முன்தினம் மாலை தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி ஆட்ட முடிபின் போது 3 விக்கெட் இழப்புக்கு 91 ஓட்டங்களை பெற்றது.

இதனால் இந்தியா 164 ஓட்டங்கள் முன்னிலை அடைந்தது.

இந்தியா இரண்டாவது இன்னிங்ஸின் தொடக்கத்திலேயே விக்கெட்டுக்களை அடுத்தடுத்து பறிகொடுத்தது.

முரளி விஜய், வி.வி.எஸ்.லக்ஸ்மன் ஆகியோர் ஓட்டங்கள் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

முகுந்த் சிறிது நேரம் நிலைத்து நின்று விளையாடி 25 ஓட்டங் களை சேர்த்தார்.

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் 2ஆவது இன்னிங்ஸில் இந்தியா 3 விக்கெட் இழப்புக்கு 97 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

# உறுதியற்ற நிலைப்பா...

பிராட்அடம்ஸ்இவ்வாறுதெரிவித்துள்ளார்.

பான் கீ மூனின் செயற்பாடு ஒரு கலவையான விடயம் என்று கூறிய பிராட் அடம்ஸ், பர்மா விடயத்தில் அவர் நிறைய அறிக்கைகளை விட்டார். ஆனால் பர்மிய அரசுக்கு எதிராக செயற்படுவதில் அவர் மிகவும் பலவீனமாக இருந்தார். அவருக்கு ஒரு கோர்வையான திட்டம், யுக்தி இல்லை. சீனாவைப் பொறுத்தவரை கடந்த இரு தசாப்த காலத்தில் நடந்த மிகவும் மோசமான ஒடுக்குமுறையின் போது அவர் அமைதிகாத்தார் என்று கூறியுள்ளார்.

இலங்கை நிலைமை குறித்தும் அவர் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். இலங்கையைப் பொறுத்தவரை அவர் மிகவும் உறுதியற்ற நிலைப்பாட்டையே கடைப்பிடித்தார். போர் முடிந்த பின் இலங்கைக்குச் சென்று மகிந்த ராஜபக்ஷவுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளப்படுவதை அனுமதிக்கவேண்டாம் என்று நாங்களும் மற்றவர்களும் தந்த நல்ல அறிவுரையை மீறி அங்கே சென்றார். மகிந்த ராஜபக்ஷ தனது அரசுக்கு நம்பகத்தன்மையைப் பெற அந்த விஜயத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

இலங்கையின் போர் தொடர்பான பிரச்சினைகள் பற்றி உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒரு பொறுப்புச் சுமத்தும் வழிமுறை உருவாக்கப்படும் என்று மகிந்த ராஜபக்ஷ கொடுத்த உறுதிமொழிகளை ஏற்றுக்கொண்டதன் மூலம் ஒரு சரியான முடிபெடுப்பதில் பான் கீ மூன் தவறிழைத்துவிட்டார் என்றும் பிராட் அடம்ஸ் கூறினார். (எ)

# இலங்கையின் போர்...

கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக இந்த ஆண்டிற்குள் முறைப்படியான விசாரணை நடத்தவேண்டும் என்று இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்த பிரித்தானிய அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட், இந்த விவாதத்தின் போது தமது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படத்தைத் தயாரித்த சனல் 4 தொலைக்காட்சியின் வெளிவிவகாரப் பிரிவு செய்தியாளர் ஜொனாதன் மில்லர் விவாதத்திற்கு தலைமை தாங்குவார்.

இந்த விவாதத்தில் இலங்கைக்கு பலத்த அடியை கொடுக்கும் வகையில் பங்கேற்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழுத்தம் கொடுக்குமாறு பிரித்தானியாவிலுள்ள தமிழ் வாக்காளர்களிடம் விடுதலைப் புலி ஆதரவுச் சக்திகள் கேட்டுக் கொண்டுள்ளதாக இலங்கை அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (எ)

# சனல் 4 இன் ஆவணப் பட...

யாற்றும் படை அதிகாரிகளுக்கு கோத்தபாய ராஜபக்ஷ பணித்திருந்தார்.

இப்போது அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் 8-வது அதிரடிப்படைப் பிரிவின் தளபதியாகக் பணியாற்றிய பிரிகேடியர் ரவிப்பிரிய அமெரிக்க அதிகாரிகளுக்கு இது பற்றி விளக்கம் அளித்துள்ளார்.

55 மற்றும் 59-வது டிவிசன்களின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா பிரித்தானிய அதிகாரிகளிடமும், 57-வது டிவிசன் தளபதியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ், ஜேர்மனிய மற்றும் சுவிஸ் அதிகாரிகளிடமும் இது பற்றி விளக்கமளித்துள்ளனர்.

ஆவணப்படத்தில் உள்ளவை போர்முனைக் காட்சிகள் அல்ல என்றும் அவர்கள் திட்டவட்டமாக கூறியுள்ளனர். அதேவேளை சனல் 4வீடியோ போலியனது என்று பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு 58-வது டிவிசன் தளபதியாக இருந்து தற்போது நியூயோர்க்கில் ஐ.நாவுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதியாக பணியாற்றும் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவும் விளக்கமளித்துள்ளார்.

தற்போது இந்தியாவின் பாதுகாப்பு கல்லூரிகளில் பட்டயக்கல்வி ஒன்றைக் கற்றுவரும் 53-வது டிவிசனின் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவும், சனல் 4 வீடியோ பற்றி கேள்வி எழுப்பிய இந்திய இராணுவ அதிகாரிகளிடமும் இது போலியானது என்றே கூறியுள்ளார்.

போர் முனையில் கையடக்கத் தொலைபேசி மூலம் இந்தப்படம் பிடிக்கப்படவில்லை என்றும், இவை வீடியோப் பதிவுக் கருவிமூலம் பயிற்சி பெற்ற நடிகர்கள் மூலம் படமாக்கப்பட்டுள்ளதாகவே விளக்கமளிக்குமாறு கோத்தபாய ராஜபக்ஷ பணித்திருந்தார்.

அதன்படியே படை அதிகாரிகள் வெளிநாட்டு அதிகாரிகளுக்கு விளக்கம் அளித்திருந்தனர். ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நுகேகொடவில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கேணல் ரமேஸ் கைதுசெய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தியுள்ளார்.

கிழக்கில் புலிகளின் தலைவராக கேணல் ரமேஸ் செயற்பட்டவர் என்றும், பெருமளவு கொலைகளுக்குப் பொறுப்பானவர் என்றும் கூறியுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, ஆகையால் அவரது கொலை நியாயமானதே என்று கூறியுள்ளார்.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இசைப்பிரியா ஒரு ஆயுதம் தாங்கிய போராளி என்று குறிப்பிட்டுள்ளது. முன்னதாக வெளிநாடுகளிடம் இது போலியான வீடியோ ஒன்று என்றும் தேர்ச்சிபெற்ற நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ள நிலையில்-கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளது வெளிநாடுகளிலுள்ள பாதுகாப்பு ஆலோசகர்களுக்குகடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக இனிமேல் தாம் கூறும் உண்மையான தகவல்களைக் கூட வெளிநாட்டு அதிகாரிகள் நம்புவார்களா என்ற கேள்வி எழுந்துள்ளதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இதனிடையே சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான வீடியோ பதிவுகளில் இடம்பெற்றுள்ள 12 படையினர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. இவர்க்ள் அனைவரும் கொமாண்டோ படைப்பிரிவு, சிறப்பு படைப்பிரிவு மற்றும் 68-1வது பிரிகேட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். இனங்காணப்பட்டவர்களில் அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்களை நெருக்கமாகக் கண்காணிக்கும்படியும் தம்மிடம் கலந்தாலோசிக்காமல் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக் கூடாது என்றும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பணித்துள்ளார் என்றும் அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ)

# அச்சுறுத்தலுக்கு அஞ்ச...

சுய நிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகிறார்களே தவிர அடிமைகளாகவோ, இரண்டாம் தரப் பிரஜைகளாகவோ வாழ விரும்பவில்லை.

இதனால்தான் ஆறு தசாப்தங்களாக ஆயுதப் போராட்டம் அகிம்சைப் போராட்டம் என எமது உரிமைக்காகப் போராடுகின்றோம். ஆனால் ஆயுதப் போராட்டத்தை அழித்துவிட்டோம். இத்துடன் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டமும் முடிபுக்கு வந்துவிட்டதாக இந்த அரசு நினைத்து தனது மமதையில் வெற்றிவிழாவும் கொண்டாடியது. இந்த நேரத்தில் அதாவது ஒரு புறத்தில் தமிழ் மக்களை அழித்து அகதிகளாக்கி முட் கம்பிக்குள் வைத்துவிட்டு மறு புறத்தில் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றபோது பொதுத் தேர்தலை நடத்தி தமிழ் மக்களின் அரசியல் பலத்தையும் இல்லாதொழிக்க வேண்டும் என எண்ணி இந்த அரசானது பொதுத் தேர்தலை நடத்தியது.

ஆனால் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை அழிக்க அரசு எடுத்த எந்த முயற்சியும் கைகூடவில்லை. மாறாக தமிழ் மக்களின் அரசியல் பலமாக மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழ் மக்கள் தெரிவு செய்தார்கள்.

இதனால்தான் தமிழ் மக்களின் அரசியல் சக்தியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயமாக விரும்பியோ, விரும்பாமலோ அதாவது இந்தியாவினதும், சர்வதேச நாடுகளினதும் அழுத்தம் காரணமாகவோ என்னவோ இந்த அரசு பேசுகின்றது.

ஆனால் இதுவரை நடந்து முடிந்த பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதேநேரம் அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாரிய வெற்றியீட்டியது. அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரும்பான்மைக் கட்சியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது பலத்தை நிரூபித்தது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரசுக்கோ அல்லது அரசின் ஊதுகுழலாக விளங்குகின்ற குழுக்களுக்கோ, தமிழ் மக்கள் மத்தியில் எந்த ஆதரவும் இல்லை என்பதை நன்றாகப் புரிந்துகொண்ட இந்த அரசு சற்று முன்னோக்கிச் சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மறைமுகமாக இல்லாமல் நேரடியாகவே தாக்கவேண்டும்.

இவ்வாறு தாக்கினால் அவர்கள் நாட்டைவிட்டு ஓடிவிடுவார்கள். பின்பு எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என நன்கு திட்டமிட்ட முறையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் கடந்த வாரம் யாழ். அளவெட்டியில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக இராணுவமும் பொலிஸாரும் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை தெரிவித்திருந்தாலும் இராணுவத்திற்குள் உள்ள தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு குழுவே தான் இந்தத் தாக்குதலை நடத்தியதாக அரசாங்க அமைச்சரே கூறியிருக்கிறார். எனவே அரசாங்கத்தின் நன்கு திட்டமிட்ட தாக்குதல் நடவடிக்கையே இது எனத் தெரியவருகிறது. ஆனால் எத்தகைய அச்சுறுத்தலுக்கும் நாம் அஞ்சப்போவதில்லை. தீர்வு கிடைக்கும்வரை எமது பணி தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# இலங்கை குறித்த கேள்...

நாடுகள் சபையின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பில் எந்த மாதிரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என இன்னர் சிற்றி பிரஸ் அவரிடம் கேள்வி எழுப்பியுள்ளது. எனினும் இதற்கு பான் கீ மூன் பதில் வழங்கவில்லை.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மார்டின் நெசர்கி, இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலகம் அடுத்த கட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். எவ்வாறாயினும், இந்த அறிக்கை தொடர்பிலான அடுத்தக்கட்ட நகர்வுக்கு இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இச் செய்தியாளர் சந்திப்பின்போது சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட இலங்கையின் கொலைக்களம் வீடியோ தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த வீடியோவில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் இலங்கை விஜயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் வழங்கிய பேச்சாளர், பான் கீ மூன் இலங்கையில் பல்வேறு இடங்களுக்கு விஜயம் செய்திருந்தபோதிலும், அவை அனைத்தும் சனல் 4 வீடியோவில் குறிப்பிட்டிருக்கவில்லை என தெரிவித்துள்ளார். (எ)

# அரச ஊடகங்களில் வடி...

அதன் காரணமாக நாட்டில் எந்தவொரு எதிர்க்கட்சிக்கும் அரசாங்கத்திற்கெதிரான ஆர்ப்பாட்டங்களையோ, ஊர்வலங்களையோ நடத்த முடியாதுள்ளது.

அத்துடன் அரச ஊடகங்கள் அனைத்தும் மக்களின் உண்மையைக் கொண்டு செல்வதற்குப் பதிலாக வடிகட்டின பொய்கள் மூலம் அரசாங்கத்தின் நோக்கங்களைப் பூர்தத் செய்யவே துணை போகின்றன. அவற்றுக்கு எதிராக வழக்குத் தொடருவதாயின் நாளாந்தம் பல வழக்குகளைத் தொடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

ஆயினும் எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி பொதுமக்களும் அரசாங்க ஊடகங்களின் பக்கச்சார்பான நடத்தை குறித்து நன்றாகவே புரிந்து கொண்டுள்ளதால் அதன் போலியான செய்திகள் மக்களிடம் எடுபடுவதில்லை என்றும் கரு ஜயசூரிய தொடர்ந்தும் சுட்டிக்காட்டியுள்ளார். (நு)

# அரசு- கூட்ட...

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னைய கலந்துரையாடலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் அரசாங்கத்தின் பதில் இக் கலந்துரையாடலின்போது கூட்டமைப்பிற்குத் தெரியப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்கும் அரசாங்கத்தின் யோசனைக்கு இந் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# தேசத்திற்கு...

மேற்படி கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் ஆயிரத்து 200 அரசாங்க, தனியார் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் உற்பத்திகளும் சேவைகளும் காட்சிப்படுத்தப் படவுள்ளன. கடந்த கால அபிவிருத்திகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை விளக்குவதாக இக் கண்காட்சி அமையும்.

இக் கண்காட்சிக்காக ஒயமடுவ பகுதியிலுள்ள நூலகங்கள், பாடசாலைகள், வீதிகள் என்பன புனரமைக்கப்படவுள்ளன. இவ்வருடம் பதுளையில் நடத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண் காட்சியை சுமார் இரண்டு மில்லியன் மக்கள் பார்வையிட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. (எ)

## மரண அறிவித்தல்

### செல்லக்குமார் ராஜ்குமார்



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும், உடுத்துறை வடக்கு தாழையடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லக்குமார் ராஜ்குமார் (சிறிசுவா) 21.06.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லக்குமார் காலஞ்சென்ற லூர்த்து மேரியின் அன்பு மகனும் லூன்சியாவின் அன்புக் கணவரும் அபிஷனின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரம் (சத்தியராஜ்), மல்ஷிகாமலரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் இரங்கல் திருப்பலியுடன் தாழையடி புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

உடுத்துறை,
தாழையடி.

தகவல்:
குடும்பத்தினர்

(5279)

MyWay இன் SPOKEN ENGLISH
ஆசிரியர்கள், அரச, தனியார் அலுவலர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகள்
சனி, ஞாயிறு 3 மாத பயிற்சிநெறி
பயிற்சியில் சேர கடைசி சந்தர்ப்பம்
26.06.2011 சனிக்கிழமை
பிரிவுகள் : காலை 10-11, 11-12, மாலை 2-3, 3-4, 4-5, 5-6
27.06.2011 முதல் அனுமதி நிறுத்தப்படுகிறது
பயிற்சிக்கான மொத்த கட்டணம்
ரூபா 3000/- மட்டும்
MyWay 182, Stanley Rd, Jaffna 077 33 63 456

உடன் விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள லான்ட்மாஸ்ரர் (C Band) பெட்டியுடன் (விஷ்ணு தொழிலகம்) விற்பனைக் குண்டு.
தொடர்புக்கு:-
(சி-3550) 0773464139

பதவி வெற்றிடம்
❋ கணனி தமிழ் ரைப்பிங்
(ஆண்கள் - இரவுக் கடமை)
❋ கணனி தமிழ் ரைப்பிங்
(பயிலுநர்கள் - ஆண்கள் - இரவுக் கடமை)
❋ அலுவலக செய்தியாளர்கள்.
(ஆண்கள்-பகல் / இரவுக் கடமை)
❋ ஒப்புநோக்குநர்
(பயிலுநர் - ஆண்கள் - இரவுக் கடமை)
யாழ்.நகர மையத்திலிருந்து கிட்டிய தூரத்தில் வசிக்கும் ஆர்வமுடையவர்கள் நேரில் வரவும்.
வலம்புரி
இல:3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

D.C.M
163, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L - 2012,2013 வர்த்தகப்பிரிவு
பொருளியல் — S.வரதராஜன் B.A(Hons)
வணிகக்கல்வி — V.முரளி B.B.A(fm spl)
கணக்கீடு — A.P.பகீரதன் B.B.A(fm spl)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
(நேர அட்டவணை அலுவலகத்தில்)
நிர்வாகி
S.வரதராஜன்

என்னும் எண்ணங்களை எளிதில் பெற்றிட...
Digital banner (Photo Quality)
ஒரு சதுர அடி 45/= ரூபாய் மட்டுமே
Caxton
DIGITAL MART
For Accurate Printing Works
1/1, நல்லூர் மாக்கற்,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காட்டுச் சந்தி.
(c-3553)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.